Reg. No. M. 2997.

தனிப்பிரதி 2 அணா


ஆசிரியர் :
யாழ்ப்பாணம்
தென்கோவை.
ச. கந்தையபிள்ளை
தமிழ்ப் பண்டிதர்,
சிலோன்.


REPUBLIQUE FRANÇAISE

Liberté - Egalité - Fraternité


# VITTAGAM

LE REDACTEUR
TENKOVAI
S. CANDIAH PILLAI
TAMIL PANDIT
JAFFNA
CEYLON.


JOURNAL HEBDOMADAIRE PARAISSANT LE JEUDI


# வித்தகம்

வியாழக்கிழமைதோறும் வெளிவருவது


நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது. — குறள்.

VOL. I. { புதுவை, ஸ்ரீமுக ௵ பங்குனி ௴ ௨௨ (15—3—34) } No. 16, 17


## ஔவை குறள்

நிரவி யழலுருவாய் நீண்ட வெளிகாணில்
அரவணையா னாகு முடம்பு.

உருவந் தழலாக வுள்ளத்தே சென்று
புருவத் திடையிருந்து பார்.

புருவத் திடையிருந்து புண்ணியனைக் காணில்
உருவற்று நிற்கு முடம்பு.

அகம்புறம் பேராப் பொருளை யறியில்
உகம்பல காட்டு முடம்பு.

ஆவிபாழ் போகா தடக்கி யிருந்தபின்
ஓவிய மாகு முடம்பு.

அஞ்சு மடக்கி யறிவோ டிருந்தபின்
துஞ்சுவ தில்லை யுடம்பு.

தீயாக வுள்ளே தெளிவுற நோக்கினால்
மாயாது பின்னை யுடம்பு.

தானந்த மின்றித் தழலுற நோக்கிடில்
ஆனந்த மாகு முடம்பு.

ஒழிவின்றி நின்ற பொருளை யுணரில்
அழிவின்றி நிற்கு முடம்பு.

பற்றற்று நின்ற பழம்பொருளைச் சிந்திக்கில்
முற்று மழியா துடம்பு.

# "நத்தம்போல் கேடும்"

என்னும்

## குறளுரை.

உண்மைக் கடவுள் வழிபாடாகிய அரிய பெரிய சகச நிட்டையாளராய் உலகர்போல் வாழ்ந்து ஒப்புரவொழுகித், தமது உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிச் சூக்குமமாய்க் காரணத்தில் ஒடுங்குதல் எனப்படும் உண்மை முத்தியடைதல், பலகோடி ஜென்ம நற்றவப்பயன் திரண்டு ஒருவடிவெடுத்த வித்தகர்க்கே யன்றி மற்றையோர் கல்வியில் எத்துணை வல்லபம் படைத்தலரே யாயினும் அவர்க்கு முற்றுக முடியாத காரியமே என்பது சொல்லாமலே அமையும். அநித்தியமாகிய செடிசேர் உடலைச் செலவிக்கின் அலைதாவது உலகத்துள்ள சாதலைத் தரும் அசுத்தநிறையை அழித்துச் சிவலோக வாழ்விற்குரிய சாவாஉடம்பாகிய பிரணவமந்திர சரீரம் பெற்று நித்தியராதல், குருநெறி கடைப்பிடித் தொழுகி மாயையை அடிப்படுத்த வல்ல மதிவைராக்கிய முடைய வித்தகர்க்கேயன்றி, மற்றைய உலக மாக்களுக்குஅரிதினும் அரிதாகும்."நத்தம் போல் கேடும் உளதாகும் சாக்காடும், வித்தகர்க் கல்லால் அரிது" என்னும் தேவர் வாக்கும் இவ் அரிய பெரிய உண்மையையே உணர்த்தி நின்றதென்பது இதன்உண்மைப் பொருளை உற்று நோக்குவார்க்குத் தெற்றெனப் புலப்படாத தாகாது. இச்செய்யுள் திருவள்ளுவரால் அவர் இயற்றிய திருக்குறளில் நல்லறம் எனப் புகழப்பட்ட இல்லறவியலின் இறுதிக்கண்ணே புகழ் என்னும் அதிகாரத்துக் கூறப்பட்டுள்ளது.சிவர்களுக்கு வினைப்பயனுக சேர்ந்த இரோதான நிலையாகிய உலகியலோடு அருள் நிலையாகிய உண்மை நிலையையும் ஒருங்கு கூறிப் போதருதல் தேவர் இயல்பாதலின், உலகியல் காரணமான புகழோடுமனம் வாக்குக்காயங்களால்நினைந்துபாராட்டி ஒழுக வல்லார்க்குப் பெரும் பயன் தருவதாகிய உண்மை முத்திநிலையாகும் உண்மைப் புகழையும் அன்னவர் இவ்வதிகாரத்துக் கூறிப்போந்தனராவர். இவ்வாறே புலான் மறுத்தல் என்னும் அதிகாரத்தும் ஒருவன் மிருகம் பறவை முதலியவற்றைக் கொன்று அவற்றின் ஊனை உண்ணுதலை ஒழிதல் வேண்டும் எனக் கூறிய தேவர், "கொல்லான் புலாலை மறுத்தானைக் கைக்கூப்பி, எல்லா உயிருந்தொழும்" என்னும் செய்யுளால், அவன் மாயா காரியங்களாலும் அவச்சலனங்களாகிய கீழ்முக வினைவுகளாலும் தன் உடலாகிய புலாலையும் கொல்லாது சாதகயோகங்களால் அதனை மறுத்து [மாற்றி] நித்தியத்துவம் அடைய வேண்டும் எனவும்,அத்தகைய சீவன்முத்தனை எல்லா உயிரும் கைகூப்பித் தொழும் எனவும் உண்மை நிலையையும் ஒருங்கு கூறிப் போந்தமையும் அறிக. மாயாதநுவாகிய மருளுடம்பை மாற்றிச் சாவா உடம்பாகிய ஓ வடிவம் (பிரணவ மந்திர சரீரம்) பெற்ற சீவன் முத்தர் சராசரப் பொருள்களால் யாது இடையூறும் அடையாமையையும் அன்னவரை மூவுலகும் கைகூப்பித் தொழுதலையும் பின்வரும் குமார தேவர் திருவாக்காலும் அறிக.

### சுத்தசாதகம்

மண்ணினிற்றடுக்கச்சலத்தினினவைக்
கருக்கனலிற்சுடலரியால்
கண்ணிநின் றசைக்கவெளியிடமிடவே
சஞகிடாதென் றன்றிலகும்
புண்ணியச்சீவன் முத்தர் தம்வடிவம்
பொற்புறவடிவுகண்டளவே
விண்ணின்மண்ணினிற்பாதலத்தினி
[லுள்ளோர்
வியப்பொடு மெழுந்திறைஞ் சிடுவார்
(செ.—78.)

ஒருவன் பிறவியை அறமாற்றும் பேரின்பத் தடம்புகுந்து சாதலைத் தரும் அநித்திய நிறையாகிய அசுத்த நிறையை வகித்திருக்கும் மருளுடம்பு கேடடைய அழியாப் பேரின்பப் பெருவாழ்வினை அளிக்கும் நித்திய நிறையாகிய அமல நிறையை ஆக்கமுறச் செய்து பிரணவ மந்திர சரீரமாகிய சாவா உடம்பு பெற்று நித்தியனுதலினும் மிக்க புகழ் பிறிதில்லை என்பதும், ஆறறிவு பூரணம் பெறுதற்குரிய மக்கள் வாழ்வின் முக்கிய நோக்கமும் இதுவே என்பதும், இத்திறம் வாய்க்கப்பெறுதல் பலகோடி ஜென்ம நற்றவப்பயனுக சேர்ந்த மதித்திறமுடைய வித்தகர்க்கேயன்றி ஏனையோர்க்கு முற்றுக அரிதாம் என்பதும் அறிஞர் யாவரும் நன்குணர்ந்த உண்மையேயாகும். ஆதலால் "நத்தம் போல் கேடும்" என்னும் குறட்பாவுக்கு பின்வருமாறு பொருள் கூறப்படுதல் அறிஞர் யாவருக்கும் அங்கீகாரமாகும் என்பது துணிபு.

**நத்தம்** (ஆகும்) **கேடும்**—அமல நிறையாகிய நித்திய நிறை ஆக்கமுறுதற்கேற்றவாறு அசுத்த நிறையாகிய அநித்திய நிறை ஒழிவு பெறுதலும், **உளது ஆகும் சாக்காடும்**—பிரணவ மந்திர சரீரமாகிய சாவா உடம்பு உளதாதற் கேற்றவாறு செடி சேர் உடலமாகிய மருளுடம்பு சாதலுருச் சாதலடைதலும், **வித்தகர்க்கு அல்லால் அரிது**—புதுவினையாகிய மதிவினையால் பழவினையாகிய விதிவினையை வெல்லும் சதுரப்பாடுடையார்க்கன்

றிப் புதுவினை பற்றி ஒழுக அறியாத உலகமாக்களுக்கு இல்லையாகும் என்பது.

நத்தம் நந்தல் என்பன நந்து என்னும் வினையடியிற் பிறந்த தொழிற்பெயர். இவை வளர்தல், கெடுதல் எனப் பொருள்படும். போல் என்பது ஈண்டு உரையசை ஆகும் என்பதனை இரண்டிடத்தும் கூட்டுக. மதிவினையாகிய புதுவினைபற்றி ஒழுகுதலால் அவவினை ஒழிந்து அஞ்ஞான பௌதிக தனுவாகிய மருளுடம்பு அசுத்த தநு நீங்கி அமல நிறை என்னும் அமல ஒளி ஆக்கமுறப் பெற்று உண்மைச் சாதல் என்னும் சாதலுறாச் சாதலடைய, ஞான பௌதிக தநுவாகிய பிரணவ உடம்பு நிற்கப் பெறுதலால், நித்தியராகாது அம்மருளுடம்பு பிணமாக விழப் போலிச் சாதலடைந்து பிறவி வலைப்படுவோர் உண்மை புகழுடையராதற்கேற்ற மதித் திறமுடைய வித்தகரல்லராதலின், அவர்க்கு இத்திறம் வாய்க்கப்பெறுதல் இல்லை என்பார் "வித்தகர்க் கல்லால் அரிது" என்றார். "நத்தம் போல் கேடும்" என்பதற்கு அமல நிறையாகிய நித்திய நிறை ஆக்கமுறுதல் போல அசுத்த நிறையாகிய அநித்திய நிறை ஒழிவு பெறுதலும் எனவும், "உளது ஆகும் சாக்காடும்" என்பதற்கு (அதன் பயனாகிய) உண்மைச் சாதல் என்னும் சாதலுறாச் சாதலும் எனவும் பொருள் கூறினும் அமையும். இப்பொருட்கு, ஆக்கமும் கேடும் ஒருங்கே நிகழ்வனவாதலின் "நத்தம் போல் கேடும்" என்றார் எனவும், அசுத்த நிறை என்னும் மாயையானது அமல நிறை என்னும் ஞான சத்தியாக மாறுதலால் "உளது ஆகும் சாக்காடும்" என்றார் எனவும் அகலம் கூறுக. அசுத்த நிறை என்னும் மாயையானது அமல நிறை என்னும் ஞான சத்தி வடிவமாக மாறுதலால் பாசங்கள் பற்றுக்களும் நான் என்னும் முனைப்பும் அற்றுச் சிவத்துவம் சாதலடைதலால் இது சாதலுறாச் சாதலாகிய உண்மைச் சாதலாயிற்று. உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடையாது உடல் பிணமாக விழுதலால் சிவத்துவம் நீங்காது பிறவி நெறியே உளதாதலால் மரணம் போலிச் சாதலாயிற்று. உடலும் உயிரும் ஒழிவற ஒன்றுதலால் அசுத்த நிறை என்னும் மாயை அமல நிறையென்னும் ஞான சத்தியாக மாறுதலடையும் என்பதனை "உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிற், படரும் சிவசத்தி தாமே" (திருமந்திரம் 8-ம். தந்திரம் 37-வது விசுவக்கிராசம் 2.) என்னும் திருமூலர் திருவாக்கானும் அறிக. கல்வி செல்வம் அதிகாரம் என்பன காரணமாகச் சிற்சில நூல்களையும் லௌகிக கருமங்களையும் உஞற்றி அவை காரணமாகவும் பிறவாற்றானும் அவச்சலனமடைந்து யம வேதனைப் பட்டு இறந்தோரைச் சாவா உடம்பு பெற்றோர் என்பாருமுளர். இது போலிவழக்கேயன்றி உண்மையாகாது. என்னை? அவர் முனைப்போடு நின்று போலிப் புகழும் பிறவும் கருதி உஞற்றிய அவவினையால் முன்னைய மருளுடம்பு பிணமாகவிழ அவ்விடத்தும் மற்றோர் மருளுடம்பைப் பற்றினரேயன்றிச் சாவாஉடம்புபெற்று நித்தியராயினர் என்பது அசம்பாவிதமாதலின்! தூலம் பிணமாகவிழ இறந்தோர் பிறிதோர் தூலத்தைப் பற்றிப்பிறவிவலைப்படுவார் என்பதனை "மேலொரு வடிவை எடுத்ததேயாகின் மேவும் இவ் உடல் இங்கே விழும்" என்னும் சுத்த சாதக (செ. 19)ச் செய்யுளானும் அறிக.

சீவன் மாயாகாரியங்களானும் அவச்சலனமாகிய கீழ்முக வினைவுகளானும் தூலம் பிணமாக விழப் போலிச் சாதலடைவது கண்கூடாதலின், அதனை மாற்றுவதென்பது, அஃதாவது அநித்தியமாக வருவதனை நித்தியப்படுத்துவதுபலகோடி செம்ம நற்றவ பயனாக சேர்ந்த மதிமுயற்சியுடைய வித்தகர்க்கேயன்றி மற்றையோர்க்கு அரிதினும் அரிதாகும். மதிமுயற்சியாவது முன்னிலைக்கோரணிகளாகிய நன்மை தீமைகளைப் பொருட்படுத்தாது திருவருணாட்டம் வழுவற வகித்து அந் நன்மை தீமைகளுக்குக் காரணமான கர்மங்களின் பேதங்களையும் அவ்வவற்றின் வலியையும் பஞ்சதிணைகளாலாய தூலசரீரத்தின் பஞ்சீகரண பேதங்களையுந் நன்குணர்ந்து அவைகளில் எந்த எந்த நிறை ஏற்றம் இறக்கம் பெற்று இருக்கின்றதோ அந்த அந்த நிறையைக் கூட்டவும் குறைக்கவும் வேண்டிச் சற்குருநாதனால் விதிக்கப்படும் அரிய பெரிய வேதாகம விதிகளை வழுவறத் தாங்கி ஒழுகுதற்கண் உளதாகும் மதிவைராக்கியமாகும். "தெய்வத்தா னாகாதெனினும் முயற்சி தன், மெய்வருந்தக் கூலி தரும்" என்று பணித்ததேவர், வினைக் கூட்டமாகிய முன்னிலைக் கோரணிகளுக்கு ஆட்பட்டு இத்தகைய முயற்சி இனிதின் இயன்று முடியுங்கொலோ என ஐயுற்றுச் சோம்புவார்க்கு அம்முயற்சி மிக்க வன்மையுடையதாகும் என்பதனைப் புலப்படுத்துவதற்கே "ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று, சூழினுந் தான்முந் துறும்" எனவும் கூறுவாராயினர். மதிவினையால் விதிவினையை வென்று யமவேதனையாகிய சாதலுக்கு ஆட்பட்ட மருளுடம்பை மாற்றிச் சாவா உடம்பு பெற்று நித்தியத்துவம் அடையலாம் என்பது பின்வரும் தேவர் வாக்கானும் புலப்படும்.

## குறள்

ஊழையு முப்பக்கக் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

சொல்லாமை மேற்கொண் டொழுகுவான் [வாழ்நாண் மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று.

கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலி
னாற்றறலைப்பட் டவர்க்கு.

தெய்வம், ஊழ், விதி என்பன ஒன்றேயாம். இவ்வுருவமே கடவுளுருவம். கடவுள் அவரவர் வினைக்கேற்பக் குருவாய் விளங்குவர். அவரவர் மதி முயற்சிக் கேற்ற பயனை

அத்தெய்வமே ஊட்டிவைக்கும். சிவ முயற்சியால் வினைமாறில் மாற்றமடைந்த அவ்வினையே தெய்வமாகப் போந்து அதன் பயனையும் ஊட்டிவைக்கும். இதனால் நல்வினைக்கும் தீவினைக்கும்தெய்வமே சாட்சி என்பதன் உண்மை நன்கு புலப்படுகின்றது. ஆதலால் தனக்குரிய நிறையளவால் கால அளவு கடந்த நித்திய நிறையை அணு அணுவாகத் தழுவி அநுட்டித்து வருங்கால் நல்வினை என்னும் மதிவினை விளைந்து விதிவினையை அழித்து விடும். இதனால், முன்னின்ற சடம் பிணமாய் விழ உயிர் மற்றோர் சடத்தைப் பற்றாது அவ்வுடலும் உயிரும் ஒழிவற ஒன்றி நித்தியத்துவம் அடைதலாகிய உண்மைப் புகழ் பயக்கும் நித்தியானந்தப் பேறு உளதாகும். இதற்குப் புதுவினையாகிய மதிமுயற்சி முன்னிற்க வேண்டும். இவ்வளவு அரிய பெரிய மறைகளை எல்லாம் அடக்கியே "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன், மெய்வருத்தக் கூலி தரும்" என்றார் தெய்வப்புலவர். பின்வரும் திருமந்திரச் செய்யுளும் இவ் வுண்மையையே உணர்த்துகின்றது.

"நான் பெற்ற வின்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடி
ஊன்பற்றி நின்ற வுணர்வுறு மந்திரம்
தான்பற்றப் பற்றத் தலைப்படுந் தானே.

(வான்பற்றி நின்ற மறைப்பொருள்—அமல ஐகார ஒலியாகிய நித்திய வேதம். ஊன் பற்றி நின்ற உணர்வுறு மந்திரம்—மௌன வித்தை. தான் பற்றப் பற்ற என்பது மதி முயற்சி.)

மௌன வித்தையைச் சற்குருநாதன் பாற் பெற்றுப் பயின்று சகச நிட்டை கைவரப்பெற்ற தத்துவப் பெரியாராகிய வித்தகர்க்கே அமல நிறையாகிய அமல ஒளி ஆக்கமுறப் பெறுவதாகும். காடு மலைகளிலும் பிறவிடங்களிலும் துற்றவை துறந்த வெற்றுயிராக்கையராய் இயற்கையின் திறன் அறியாது வாயோடு கண்மூடி மயக்கமுற்று அசைவற்று வீற்றிருக்கும் சவிகற்ப நிர்விகற்ப நிட்டையாளர் நிறை இன்னது என அறிவது அசாத்தியமேயாகும். நிறையை அறிந்தவரே எம்பெருமான் திருவடியைக் கண்டவராவர். சகச நிட்டை யாதோர் குறிப்பும் இல்லாதது. இந்நிட்டையாளர் உலகர் போல் வாழ்ந்து ஒப்புரவொழுகுவர். இவரை நிட்டையாளர் என்று உலக மாக்கள் அறியமாட்டார். இவர் ஒழுக்கங்களின் உண்மைகளையும் பிறர் அறியமாட்டார். இவர் போன்றவரே இவரை அறிவர். இப்பெரியார் பற்றற்றவராதலின் வேடங்களாற்றான் பிறவாறு தான் உலக மாக்களின் வேறாகத் தம்மைக் காட்டுபவராகார், "வேர்த்தாற் குளித்துப் பசித்தாற் புசித்து விழித்துயின்று பார்த்தால் உலகத்தவர் போல் இருப்பர்." அமல நிறை, அமல ஒளி, சத்துவம், சிவம் என்பன ஒன்றே. எம்பெருமான் ஒருவன் உடலிற் குடிபுகப் பெற்றால் அவனிடத்துள்ள காமம் கோபம் முதலிய தியகுணங்கள் சத்துவமாக மாறிவிடும். அஃதாவது அசுத்த நிறை அமல நிறையாக மாற்றமடையும் என்பதும். லௌகிக தந்திரமாகிய சத்துவம் மௌனம் என்பன போலியாகும். மெய்யடியாராகிய தத்துவப் பெரியாரே உண்மைச் சத்துவராவர்.

எத்தனையோ இருடிகளும் முனிவர்களும், மணிவாசகப்பெருமானும், அறுபான் மும்மை நாயன்மாரும், ஆழ்வார் என்னும் திரு நாமத்துக்கு வாய்மையில் இலக்காகி வதிந்த மகான்களும், பட்டினத்தார், பத்திரகிரியார், சேந்தனார், முத்துத் தாண்டவர் என்பவர்களும் சற்குருநாதனாகிய எம்பெருமான் அருளால் உண்மைச் சாதக யோகங்களை அடையப் பெற்று அவற்றை வாழவறத் தாங்கி ஒழுகி இயற்கையோடு ஒத்து நின்று ஒப்புரவொழுகுதலாகிய அரிய பெரிய சகச நிட்டையாளர்களாய் அயன் கையெழுத்தை அழித்துக் காலனை உதைத்து அஃதாவது தூலத்துள்ள சாதலைத் தரும் அசுத்த நிறையை அழித்து நித்யத்வம் அடைந்தவரே யாவர்.

மார்க்கண்டேய முனிவர்பொருட்டு எம்பெருமான் காலனைக் காலால் உதைத்தனன் என்பதன் உண்மைப் பொருளும் அம்முனிவர் சாவா உடம்பு பெற்று நித்தியராயினர் என்பதன் உண்மையும் ஈண்டு நோக்கற்பாலன. "கூற்று அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே" (பண் காந்தார பஞ்சமம்) எனத் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளியதும், "அவன், கால்பட் டழிந்ததிங் கென் றலைமேலயன் கையெழுத்தே" எனவும்; "என்னை மறந்திருந்தேன் இறந்தே விட்டதிவ்வுடம்பே" எனவும் (கந்தரலங்காரம்) அருணகிரிநாதர் அருளியனவும் அறிக. எம்பெருமான் திருவடி எனப்படும் அமல ஐகார ஒலியாகிய சூக்கும கற்பத்தை அருந்திய சகச நிட்டையாளரே விதியை வென்று காலனை உதைத்து மருளுடம்பை மாற்றி நித்யத்துவம் அடைய வல்லராவர். தூலத்துள்ள அசுத்த நிறையை நீக்கி அமல நிறையாகிய உண்மைச் சத்துவம் ஆக்கமுறப் பெற்று நித்தியத்துவம் அடைய வேண்டும் என்னும் உண்மையையே திருவாசகம் முதலிய தத்துவப் பெரியார் பாடல்கள் முறையிடுவனவாகும். அசுத்த நிறையமைந்த மருளுடம்பைச் சாவா உடம்பாகிய ஒ வடிவமாக மாற்றி நித்தியத்துவம் அடையுமாறு மெய்யடியார் எம்பெருமானை வேண்டியமை அவ்வவர் பாடலால் நன்கு புலப்படும். அவற்றுள் சில இங்கே காட்டப்படுகின்றன.

( 14-ம் பக்கம் பார்க்க )

# உடம்பின் அருமை பெருமை

[15-வது வாரத்தொடர்ச்சி]

அடிகள்வடிவம் உலகு கண்டிட மறைந்தமையால்—சிவலிங்கமாகத் திகழ்ந்தமையால் பிணமாக விழாமையால், அவர் உண்மை முத்தியடைந்த — மீண்டுவாரா நெறியடைந்த தத்துவப் பெரியாரோ என்பதில் ஐயமில்லை. ஆதலால் உபாசக நிட்டையாளரை அடிகளுக்கு ஒப்பாகக் கருதுதலும்—அவரும் அடிகள் போல மீண்டு வாராநெறிகண்டார் எனக் கூறுவதும் பாதகமேயாகும். தூலத்தோடு மறைதலிற் காணப்படும் ஒரு சில வேறுபாடாகிய சிவ நெறிக்கும், தூலம் நிலத்துட் புதைக்கும்படி விடப்படுதலாகிய அவ நெறிக்கும் உள்ள இடையீடு அருளுக்கும் மருளுக்கும் உள்ள இடையீடு போல்வதாகும். ஆதலால் சிவ நெறியோடு அவ நெறிகளை ஒப்பக் கருதுவது சிவத்துரோகமேயாகும். அடிகள் கயிலை முதற்குரவனுகிய ஞானசாரியனிடம் கிரமமாக உபதேசம் பெற்று அமல முதற்படி கண்டு சகச நிட்டைகைவரப்பெற்று மாறிப்பிறந்த தத்துவப் பெரியார் என்பது "வெட்டாத சக்கரம்" "மாய நட்டோரையும்" "மாத்தானவத்தையும்" என்னும் திருவாக்குக்களாலும்,

"....................உயர் பொன்னெனவே
ஒளியிட்ட தாளிரண்டுள்ளே யிருத்துவது
[ண்மையென்று
வெளியிட்டடைத்துவைத் தேனினி மே
[லொன்றும் வேண்டிலனே."

என்பன முதலிய திருவாக்குக்களாலும் நன்கு புலப்படும்.

"கன்ற ருரித்தென்னை யாண்டுகொண்
டான் கழலிணைகள், பொன்னுன வாபாடிப்
[பூவல்லி கொய்யாமோ."

( திருவாசகம் )

என்னும் மணிவாசகர் திருவாக்கின் பொருளையும் நோக்குக. உபாசக நிட்டையாளர் சிலர் தூலம்—மருளுடம்பு—அசுத்த பௌதிகத்து சிவலிங்கவடிவமாயிற்று எனச் சிலர் கூறுவதுண்டெனின், அது பொருத்தமில் போலிக் கூற்றேயாகும். அன்னவர் சமாதிக்குழியின்மேல்—பிணக் குழியின்மேல் பிறர் சிவலிங்கம் வைத்தனர் என்பதே உண்மையாகும்—உசிதமாகும். இந்நிட்டையாளர் சரித்திரம் எழுதியோர் சிலர் தம்முன்மாறுபடக் கூறுவதே இவர் சரீரம் மேளதாளத்தோடு—வரிசைகளோடு புதைக்கப்பட்ட பின், ஆதனமீதில் சிவலிங்கம் வைக்கப்பட்ட உண்மையை நன்கு புலப்படுத்தும். மகமதிய வள்ளலாகிய சிதக்காதியின் சரீரம் நிலத்துட் புதைக்கப்பட்ட பின், அப்பிணத்தின் சையும் வெளியே புறப்பட்டு வந்து புலவர் ஒருவருக்கு மோதிரம் கொடுத்தது என உபகதை உரைத்தாரும் உண்டன்றோ! அறிஞர் உண்மையை உய்த்துணர்க. விரிப்பிற் பெருகும்.

மெய்யடியாரெல்லாம் சற்குருநாதன் அருளால் உண்மைச் சாதகயோகங்களை வழுவற அநுட்டித்துக் காயமாயத்தைக் கழித்து—தூலம் அமலம் அடைந்து நித்தியத்துவம் அடைந்தவரேயாவர்—காலனை உதைத்தவரேயாவர் — தூலத்தோடு மறைந்து மீண்டுவாரா நெறியை அடைந்தவரேயாவர் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. "பொய்ம்மையாளரைப் பாடாதே" என ஆணைதந்த தம்பிரான் றோழரும் சமயகுரவருள் ஒருவருமாகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளால் "அடியேன்" எனப் புகழ்ந்து போற்றப்பட்ட மெய்ம்மையாளராகிய நாயன் மாருட் சிலர்பலர் அடைந்த முத்தியைப்பற்றி, அவர் சரித்திரம் எழுதிய பௌராணிகர் விளக்கமுறக்கூறவில்லையே எனக் கருதுவார்பலர். பௌராணிகர் பூரணமான அன்னவர் ஒழுக்கங்களையும் முத்தி நிலையையும் விரித்துக் கூறாது உய்த்துணரவைத்த தன் காரணம் அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும். சுந்தரரால்போற்றப்பட்ட அறுபான் மும்மை நாயன்மார் எல்லாம் தூலத்தை அமலமாக்கி அதனோடு மறைந்து உண்மை முத்தியடைந்தனர் என்பதில் ஐயுறுதல் பாதகமே—சிவத்துரோகமேயாகும்.

வேதாகம புராணேதி காசங்களெல்லாம் உடம்பின் அருமைபெருமையையே—மாறிப்பிறந்து நித்தியத்துவம் அடைதலாகிய உண்மை முத்தியையே வற்புறுத்துகின்றன. மிக்க பழைமையினையுடைய இருக்குவேதம் ஒன்றே இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும். அமயம் நேர்ந்துழிப் பிரமாண சகிதமாக விளக்கப்படும். சிலர் இந்நூல்கள் தமக்கே உரியன என்றும், இவற்றின் உண்மைகளைத் தாமே அறிந்துவிட்டவராகவும் துணிந்து இவற்றை வயிற்று வளர்ப்புக்கருவிகளாகக் கொண்டு கொடியபாதகச் செயல்களையே உஞற்றுகின்றனர். பிறர் சிந்தைக்கு ஆளாவதுமன்றி, வேதங்களை இழிவுபடுத்தக் காரணரும் இவரேயாவர். வேறு சிலர் இவ்வுண்மையை அறியும் ஆற்றலில்லாதவராய், அவசியநேர்ந்துழியும் கொலைபுரிய மனமில்லாதவராய் "சமணச்சைவர்" ஆய், லௌகீக காரியங்களில் பிறர்காணயோக்கியராய்ப் போலிச் சத்துவம்—மௌனம் வகித்து நடித்து, சிற்சில ஆசாரங்களைக் கைக்கொண்டு ஒழுகி, கற்பனையே—மாயையே சத்தியத்தின் முதலாம் தோற்றம் ("Illusion is the first appearance of truth") என்பதும் அறியாது, கற்பனையால் கற்பனையை வென்று அஃதாவது மாயையை — முன்னிலையை நிறைகண்டு பஞ்சீகரணித்து அதனை வென்று நித்தியத்துவம் அடையவேண்டும் என்பதும் அறியாது, மாயையை வென்றாலன்றி அம்மாயைக்குள் அகப்பட்டு அதனால் மயங்குவோர் அதன் ஆதி அந்தத்தை அறிய முடியாது என்பதும் உணராது மாயாகாரியமாகிய பொய்ம்மை அகற்றி மெய்ம்மைகாண — பிரமத்தை காண — மெய்யாக — பிரமமாய் நிற்க அறியாது, "சர்வம் பிரமமயம்" எனவும் "மாயை எப்படி வந்தது" எனவும் "அது பொய்" எனவும் வாளா உழறிக்குழறி அம்மாயைக்கு—விதிக்கு—காலனுக்கு இரையாகி மாண்டு போயினர்—அநித்தியமாகக் காணப்பட்டதை மதிவல்லபத்தால்—திருவருட்சகாயத்தால் நித்தியப்படுத்த அறியாது வாய்வேதாந்த சித்தாந்தம் பேசி மாயாவாதிகளாய்ச் செத்துப் போயினர்—பிறரையும் அவ்வாறே பேசி—வாதம் புரிந்து கலாம் விளைத்துச் சாதலை நோக்கிய பாவிகளாய் வீற்றிருக்கச்செய்துவிட்டனர்—செத்துப்போவதே முத்தி என்று முடிபுபண்ணிவிட்டனர் என்பதே முறையாகின்றது.

வேதாகமங்களின் உண்மையை அறியாது அநாவசியகமாகக் கொலை புரிவோரினும், எற்ற உணவல்-சைவ உணவால் ஊனைச் சுருக்கி நுளிமைப் பெருக்கி அருளுடையாராய் உய்தியடைய அறியாது தமது ஊனைப் பெருக்க — அசுத்த நிறையைப் பெருக்க ஊன் உண்போரினும்—நிறை முறை யறியாது உண்போரினும் மேலே கூறிய பொய்ம்மை

# ஆரியமும் தமிழும்

(15-ம் வாரத்தொடர்ச்சி)

ஆக்கல் அழித்தல் என்பனவற்றுக்கு இதுவே கருவி, ஆயுதமே திறவு கோல். திறவுகோல் இல்லாமல் பேழை வாய் திறத்தல் முடியாது. இவ் ஆயுதத்தின் உண்மைகளை விளக்கிக்காட்டும் இலக்கண நூல் இல்லைபோலும்! நாமெல்லாம் உயிர், மெய், உயிர்மெய், ஆயுதம், உயிரளபு, ஒற்றளபு, என்று இப்படியாக நெட்டுருப் பண்ணினேமேயன்றி இவற்றின் உண்மைகளை நன்கு அறிந்திலேம். உயிர் மெய் ஒன்றா? வேறா? ஒன்றாயின் உயிரினின்று மெய் பிறக்க வேண்டும். வேறெனின் மெய் தானாகவே ஒலிக்கவேண்டும். உயிரோடு கூடியிருத்தலே மெய்யின் இயற்கையாகும். ஆயுதத்தின் ஒருபுள்ளி என்றும் மெய்மேல் விளங்கும். "மெய்யினியற்கை புள்ளியொடு நிலையல்" என்பது தொல்காப்பியம். மெய் தாமத இயக்கமும் உயிர் துரித இயக்கமும் உடையன வாகின்றன. இவற்றால் மெய்யின்றி உயிரில்லை உயிரின்றி மெய்யில்லை என்னும் அந்நியோந்நிய சம்பந்தம் நன்கு புலனாகின்றது.

நிரம்பிய இலக்கண நூலில்லாமல் இவற்றை விளக்குவது முடியாதகாரியமே! நிரம்பிய தமிழ் இலக்கண நூல் யாது? இத் தெய்வத்தமிழின் இலக்கணவரம்பையும் அழகையும் இனிமையையும் சித்தர் பெருமானாகிய அகத்தியர் போன்ற தத்துவப் பெரியாரே அறியவல்லராவர்.

ஆரியம் தமிழ் என்னும் வியாப்பிய வியாபகங்கள் காரணகாரிய ரூபமாய் என்றும் உள்ளனவே. இவை ஒருவரால் சிருட்டித்து மற்றொருவருக்கு அளிக்கப் பட்டனவாகா. இவ்வுண்மைகளை அறியாதார் ஆரியம் வேறு தமிழ் வேறு எனக் கட்சிகட்டிப் போராடிவிட்டனர்; போராடுகின்றனர். இது சிவம் வேறு விஷ்ணு வேறு எனக் கட்சிகட்டிப் போராடியது போல்வதோர் மூடப் போராட்டமே யாகும். இங்ஙனம் ஆரியத்தை இயற்கை ஆரியம் என மயங்கியமையே இப்போராட்டத்துக்குக் காரணமாகும். எழுதாமறையாகிய இயற்கை ஆரியமே "வான்பற்றி நின்ற மறைப்பொருள் சொல்லிடில், ஊன் பற்றி நின்ற உணர்வுறுமந்திரம், தான் பற்றப் பற்றத் தலைப்படுந்தானே" (திருமந்திரம் திருமூலர் வரலாறு 13) என்பதனால் கூறியருளப்பட்டதாகும். மௌன வித்தையைப் பெற்ற சகச நிட்டையாளரே இவ் இயற்கை ஆரியத்தை அநுபவமாக அறியவல்லராவர். வேதம் முதலியன வெல்லாம் தத்துவங்களே. இவற்றைத் தத்துவத்தாலன்றி வித்துவத்தால் அறிதல் முடியாத காரியமே. இதுபற்றியே இவற்றை அநுபவமாக அறிந்தோர் தத்துவப்பெரியார் எனப்பட்டனர். உலக நூல்களைக் கற்ற வித்துவப் பெரியார்க்குப் இவை முயற் கொம்பேயாகும். எம்பெருமான் பூரண அருளைப்பெற்று நாதபீடத்தை அணவிய அந்தணராய் மாறிப் பிறந்து ஊனமில்காயமாகிய ஒளி வடிவம் பெற்று அதனோடு உலகு கண்டு போற்ற மறைந்து உண்மை முத்தியடைந்த தத்துவப்பெரியார்க்கும் உலக நூல்களைக் கற்று மாண்டுபோன வித்துவப் பெரியார்க்கும் உள்ள இடையீடு, உண்மைக்கும் கற்பனைக்கும் உள்ள இடையீடுபோல்வதாய் அளவிடற்கரியதாகும். "வேதம்" முதலிய திருநாமங்களைப் போலி இங்ஙனமாகப் புனையப்பட்டு உலகில் வழங்கும் கற்பனை நூல்களால் உண்மை காணமுடியாது என்பதும் தத்துவப்பெரியார் பாடல்களால் நன்குவற்புறுத்தப்பட்டதாகும் அவற்றுட் சில இங்கே காட்டப்படுகின்றன.

## திருவாசகம்.

"மறைத்திறன் நோக்கி வருந்தினர்க்கு
[ஒளித்தும்"
(ஷை திருவண்டப்பகுதி)

உவலைச் சமயங்க ளொவ்வாதசாத்திரமாம்
சவலைக் கடலுளனாய்க்கிடந்து தடுமாறும்
கவலைக் கெடுத்துக் கழலிணைகள் தந்தரு
[ளும்
செயலைப் பரவிநாந் தெள்ளேணங் கொட்
[டாமோ.
(ஷை திருத்தெள்ளேணம் 17)

## அப்பர் தேவாரம்

சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டென்
[செய்வீர்
பாத்திரஞ் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்கு ளருளு மாற்பேறரே
(ஷை திருமாற்பேறு திருக்குறுந்தொகை 3)

வேதமோதிலென் சாத்திரங்கேட்கிலென்
நீதிநூல்பல நித்தம் பயிற்றிலென்
ஓதியங்கமோ ராறு முணரிலென்
ஈசனையுள்குவார்க் கன்றியில்லையே
(ஷை பாவநாசத் திருக்குறுந்தொகை 4)

## திருமந்திரம்

ஆரங்க மாய்வரு மாமறை யோதியைக்
கூறங்கமாகக் குணம் பயில் வாரில்லை
வேறங்கமாக விளைவு செய்தப் புறம்
பேறங்கமாகப் பெருக்குகின்றாரே
(ஷை வேதச் சிறப்பு 5)

## பட்டினத்தடிகள்

நீற்றைப் புனைந்தென்ன நீராடப்போ
[யென்ன நீமனமே
மாற்றிப் பிறக்கவகை யறிந்தாயில்லை
[மாமறை நூல்
ஏற்றிக் கிடக்கும் எழுகோடி மந்திர
[மென்ன கண்டாய்
ஆற்றிற் கிடந்து துறைதெரியாமல்
[அலைகிறையே.

---

யானர் சாலச் சிறந்தவரென்றே பேசப்படலாம். இது காறும் கூறியவைகளால் உடம்பின் அருமை பெருமையும் செம்பு களிம்பு நீங்கிப் பொன்னாயவாறுபோல, மாயாகாரியமாகிய மூன்னிலைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்தலால் காயம் அசுத்தம் நீங்கி அமலமடைந்து நித்தியத்துவம் பெற்றாலன்றி முத்தி என்பது முயற்கொம்பேயாம் என்பதும், இதுவே வேதாகமபுராணேதிகாசங்களும் தத்துவப்பெரியார் பாடல்களும் நுதலிய உண்மைச்சைவ நன்னெறியாம் என்பதும், நலம் பிணி மூப்புக்களால் பழுதடைந்து பிணமாக உயிர் அதனைப் பிரிவது பிறவி நெறியே என்பதும், எத்தனையோ இருடிகள் — முனிவர்கள் — சித்தர்கள் — மெய்யடியார் எல்லாம் தமது நலத்தை அமலமாக்கி — விதியை வென்று — காலனை உதைத்து, அந்நலத்தோடு மறைந்தே உண்மை முத்தியடைந்தனர் என்பதும், இவ்வுண்மை ஒன்றினாற்றான் சைவ சமயம் தலையாய் விளங்குகின்றது என்பதும் பிறவும் ஒருவாறு விளக்கப்பட்டன. மேலும் அமயம் நேர்ந்துழி நேர்ந்துழி இவை ஒவ்வொர் அம்சமாக விரித்து விளக்கப்படும்.

முற்றிற்று.

## பத்திரிகிரியார் புலம்பல்

சாத்திரத்தைச் சுட்டுச் சதுமறையைப் [பொய்யாக்கிச்,
சூத்திரத்தைக்கண்டுதுயராறுப்பதெக்காலம்

## ஔவை குறள்

நல்லன நூல்பல கற்பினுங் காண்பரிதே
எல்லை யிலாத சிவம்.

“உற்றவாக்கையின் உறுபொருள்” ஆய் “நந்தம் பாடியில் நான்மறை யோனாய், அந்தமில் ஆரியனாய்” யாண்டும் நிறைந்து நிற்கும் அருவப் பேரொளிப்பிழம்பு வடிவினனாகிய கடவுளைக் காண்பது உலக மாக்களுக்கு எளிதாகுமா? உலகமாக்கள் பலர் கடவுளைக்காணமுடியுமா?காட்டமுடியுமா? என்று உழிறிக்குழறி நாத்திகம் பேசத்துணிவதும் வியாப்பாகுமா? உண்மை வேதத்தைக் கண்டவரே கடவுளைக் கண்டவருமாவர். சத்தியமாகிய வேதத்தை வேதவடிவாகிய ஆசானைத் தம்முள்ளே காணப்பெற்ற தத்துவப் பெரியார் அவனே யாவர். இன்னோர் தமது உடலும் உயிரும் ஒழிவற ஒன்றி அவ்வுருக்கையாய்ச் சூக்குமமாய் அவ் வருவப் பேரொளிப் பிழம்பிற் கலந்து நித்தியராதல் இயற்கை முறையேயாகும். உலகிலுள்ள சமயிகள் எல்லாம் தங்கள் தங்கள் சமயநூல்களையே “வேதம்” முதலியன என்று கூறி இதற்கு மாறாக பேசுபவரோடு எதிர்த்து வாதாடி மாண்டு போகின்றனர். எம்பெருமான் வடிவமாகிய வேதம் வேதமாகிய எழுதாமறை ஒலிவரி வடிவமாக உலகில் வழங்கும் எப்பாஷையிலாவது எக்காலத்தாவது சொல்லப்பட்டும் எழுதப்பட்டும் வழங்கமுடியுமா? சகல சிவராசிகட்கும் உரியதாகிய வேதம் ஒரு பாஷையில் மாத்திரம் எழுதப்பட்டும் சில மரபினர்க்கு மாத்திரமே உரியதாகவும் இருக்கமுடியுமா? வேதாகமங்களுக்கு இப்பூவுலகில் இடங்குறிக்க முடியுமா? வேதாகமங்கள் எங்கே பிறக்கும்? ஆரிய பூமியில் அந்தணர் வாழும் இடத்திற் பிறக்கும். இதுபற்றியே ஆரிய பூமியாகிய நாதபீடமானது உத்தரகோசம், வடதிசை, கயிலை, மகேந்திரம், மறைக்காடு, கல்லால், வரை முதலிய பல பரிபாஷைகளால் வழங்கப்படுவதாயிற்று. இத்தகைய சித்தர் பரிபாஷைகளை அறியும் பக்குவம் பெறாத கற்பனைப்புலவர் கடவுள் மலைமேல் நின்றுகொண்டு வேதங்களைக் கொட்டி விட்டார் என்றும், கடலுள் முழுகிப்போன ஆகமங்களைக் கரையேற்றி விட்டார் என்றும் ஆல மரத்தின் கீழிருந்துகொண்டு யாதோ ஒரு பாஷையில் பிரசங்கம் பண்ணிவிட்டார் என்றும் பிற பலவுமாகக் கற்பனைக் கதைகளைச் சிருட்டி செய்து நமது பண்டைச் சத்திய நெறியைப் புறமதத்தவரும் இகழுமாறு பழுதுபடுத்தி விட்டனர்.

மேலேகூறிய ஆரிய பூமியும் வடதிசையுமாகிய நாத அந்தத்தை அணவித் தான் அவன் ஆகும் உண்மைச்சமாதி நிலை கைகூடிய தத்துவப் பெரியாரே மிகப் பழைய காலத்தில் ஆரியர் எனவும் வடக்கத்தையார் எனவும் உத்தரதேசத்தார் எனவும் போற்றப்பட்டனர். இவ் அரிய பெரிய ஆரிய நாமம் இந்தியாவில் வழங்கும் பல வகுப்பினராகிய சாதியாளருள்ளே சில வகுப்பினர்க்கும் அவரால் அவர் பழைய இனத்தாராகிய புறதேயத்தார்க்கும்போலி இடு குறியாக வழங்கப்பட்ட காரணம் ஈண்டு விரிக்கப்படுதல் மிகையாகும்.

சற்குருநாதனாகிய எல்லாம் வல்ல இறைவன் திருவருளைப் பெற்று அவன் அருளிய சாதக யோகங்களைத்திருவருட் கசவம் பூண்டு முன்னிலைகளைப் பொருட்படுத்தாது வழுவறத் தாங்கி ஒழுகும் புலையும் கொலையும் களவும் தவிரும் பொய்யில் ஒழுக்க நெறியுடைய மெய்யடியாரே தமிழராவர். தமிழர், தொண்டர், சைவர், தென்னர், அடியவர் என்பன ஒருபொருட் சொற்கள். இத்திருநாமங்களும் ஏனைய ஆரியர் அந்தணர் பார்ப்பார் பிராமணர் வேதியர் மறையோர் முதலிய திருநாமங்கள் போலவே உலக மாந்தர்க்குப் போலி இடுகுறியாக வழங்குகின்றன. தொண்டர் நிலை தமிழ் நிலையே என்பது ஞானசம்பந்தப் பெருமான் தேவாரப்பதிகத்திறுதி தோறும் பல இடங்களில் “தமிழ் ஞானசம்பந்தன்” என அருளியதனால் அறிக. ஈண்டுத் “தமிழ்” என்பது போலிச் சாதியைக் குறித்ததன்று. இன்னும், “முத்தமிழடைவினை முற்படுகிரிதனில் முற்படஎழுதிய முதல்வோனே” (திருப்புகழ்) என்னும் திருவாக்கும் வியாப்பியமாகிய ஆரியம் நிஷ்டபிரித்து பஞ்சீகரணித்துத் தமிழாய் வியாபகம் பெற்ற உண்மையையே சௌனமாக உணர்த்தி நின்றமை கண்டுகொள்க. இதன் திறமெல்லாம் மேலும் விரிப்பிற் பெருகும்.

மெய்யடியாராகிய தமிழன் சித்தர் பெருமக்களால் வரைகள் எனவும் அங்கங்கள் எனவும் கூறப்படும் ஆறு ஆதாரங்களையும் தன்னுள்ளே கண்டுகடந்து, அப்பால் மெய்யடியார் யணிமிடற்றும் சகல சிவராசிகளிடத்தும் உள்ளும் புறம்பும் அங்கும் இங்கும் எங்குமாய் ஆதி நடு அந்தமாய் அந்தம் நடு ஆதியாய் ஆரோகண அவரோகணமாய் ஓவாது ஒலிக்கும் வேதங்கள் நான்கையும் கண்டு கண்டு உணர்ந்து அவ் வேதஅந்தமாகிய நாத அந்தத்தை அணவி அந்நாதாந்தசோதிப்பிழம்பாகிய ஆரியனைக் கண்டுஆரியனாகின்றான்.இவ்விடத்தன்றே இப்பக்குவ சிவன் தமிழன்என்னும் பெயர் மாறி ஆரியன் என்னும் சீரிய திருநாமம் பூண்டனன். பாசங்கள் பற்றுக்களும் நான் என்னும் முனைப்பும் அற்றுச் சரீரம்பூரண அமலம் அடைந்து, அஃதாவது இருவினை உருவமாகிய உடல் உயிர் கெட்டுத்திரிந்து சமரச முற்றுத் தான் அவன் ஆகும் உண்மைச்சமாதி கைகூடி மாறிப் பிறந்து ஒ வடிவம் பெற்றுச் சதாசிவப்பேறடைந்து சிவன் முத்தனாகும் இடம் இதுவேயாகும். பின்வரும் திருவாக்குக்களும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்தும்.

## திருவாசகம்

“பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் [ஆரியனே”
(ஷை சிவபுராணம்)

“வைசலாட்டுமிவ் உடல் உயிராயின இரு, [வினை அறுத்து......ஒளியாக்கிப்
பாசமானவை பற்றறுத்து............ஆசை [தீர்த்து..........”
(ஷை அற்புதப்பத்து 8)

## சுந்தரர் தேவாரம்

“ஊன் உயிர் வேறு செய்தான்”

## திருமந்திரம்

“......ஆரியன் தோற்றமுன் அற்றமலங்க [ளே”
(ஷை 1-ம் தந்—உபதேசம் 5.)

அண்ண வழிவின்றி யுள்ளேயமர்ந்திடும்,
அண்ணலைக் காணி லவனிவனாமே”
(ஷை 9-ம் தந் ஞானகுரு தெரிசனம் 5.)

தானவனாகுஞ் சமாதிகை கூடினால்,
ஆன மலமற மப்பசுத் தன்மைபோம்
ஈனமில் காயம் இருக்கும் இரு நிலத்
தானங்க ளெட்டுமொழித்தொன் றுவோர் [கட்கே.
(ஷை 8 ம் தந். நின்மலாவத்தை 17.)

( 13-ம் பக்கம் பார்க்க )

உ
திருவருள் துணை.

காலமுண்டாகவே காதல்
செய்துய்மின் கருதரிய
ஞாலமுண்டானொடு நான்முகன்
வானவர் நண்ணரிய
ஆலமுண்டானெங்கள் பாண்டிப்
பிரான்தன் னடியவர்க்கு
மூலபண்டாரம் வழங்கு
கின்றானவந்து முந்துமினே.
(திருவாசகம்.)

# வித்தகம்

புதுவை,
ஸ்ரீமுக பங்குனிமீ 2உ

## மனைவி

மனைவி என்பதன் பொருள் என்னை? மனை என்றால் இல் என்பர்—வீடு என்பர். மனைவி என்றால் இல்லாள் என்பர்—வாழ்க்கைத் துணை என்பர். இல் என்பது வீட்டுக்கும் பெயர்—மனைவிக்கும் பெயர். ஆதலால் மனையே—இல்லே—வீடே மனைவி என்க. "இல் எனப்பட்டாள் இல்லாள் அன்றே" என்பது வில்லி புத்தூரர் பாரதம். வீட்டுக் குரியவள்—மனைக்குரியவள் மனையாள் மனைவியே என்க. மனைவி இல்லாவிடின் மனை ஒழுங்குற அமையாது—நிலை பெற மாட்டாது. "பழுமை மடக்கொடியில்லா மனை" என்றனன் கம்ப முனி. "மனைக்கு விளக்கு மடமகள்" என்றார் பிறரும். ஆதலால் மனைவி யில்லா மனை உயிரில்லா உடல் போலும் என்க. நமது சரீரமாகிய மனையே நிறையோடு பஞ்சீகரணிக்கப் பட்டுழி வாய்மையான மனையாகும். அஃதாவது பிணி மூப்புச் சாக்காடுகள் நீங்கி நித்தியத்துவம் அடையும் என்பது. (மன் + ஐ = மனை = நிலை பெறுதலையுடையது—நிலை பேறு.) இத்தகைய மனையை நிலைபெறச் செய்தற்கு இன்றியமையாத கற்பனை ரூபமாகிய முன்னிலைகளுள் தலை சிறந்தவளாதல் பற்றியே வாழ்க்கைத் துணையாய் அமைந்த பெண் மனைவி எனவும் இல்லாள் எனவும் கிளந்து கூறப் பட்டனள்—உபசரிக்கப் பட்டனள் என அறிதல் வேண்டும்.

நமது சரீரமாகிய பெண்ணே—சத்தியே வாய்மையான—நிலையான மனைவியாவள். வாய்மையான மனைவியை உலக மாக்கள் அறிவது முடியாத காரியம். அநித்தியமாகிய—கற்பனையாகிய—போலியாகிய மனைவியரையே வாய்மையான மனைவியர் என்று உலகமாக்கள் நம்பி அவர் வசப்பட்டு ஒழுகி அலமந்து இடருறுவர். உலக வாழ்க்கையில் கற்பனைகளே இன்றியமையாதன—ஆக்கம் தருவன என்பது உண்மையே. எனினும் அவை நிறை முறையோடு பஞ்சீகரணிக்கப் படாத விடத்து அவைகளே நம்மை அவச்சலன மடைவித்து நமக்குக் கேடு பயப்பனவாகும்—காலதூதர்களாய் நம்மைக் கொல்வன வாகும் என்க. அன்ன வஸ்திர பூஷணாதி பதார்த்தங்களுக்காகக் கணவர் மாட்டு நட்புக் காட்டி நடித்துச் சமயம் நேர்ந்துழி தங்கள் சுயரூபம் வஞ்சகம் தான் என்று வெட்ட வெளிச்சமாகக் காட்டிவிடும் பெண்களை—போலியில் போலிகளை வாய்மையான மனைவியர் என்று நம்பி அவர் வசப்பட்டு அவச்சலனமடைவது—உழலுவது மிகப் பெரிய அறியாமை யன்றோ!

"யாக்ஞவற்கியர் தன் மனைவி "மைத்திரேயியை நோக்கி இல்லறம் "கூறத் தொடங்கினர்:—ஹே பிரிய "முள்ள மைத்திரேயீ! தனத்தைப் "பரித்தியாகஞ் செய்யக் கூறியதை "யும், மோக்ஷரூப அமிருத அடை "வின் சாதனம் வினவியதையும் "கேட்டு என் மனத்தே மிகவும் மகிழ் "வுண்டாயது. இவ்வுலகில் இப்புரு "ஷன் புத்திர ரூபமாய்ப் பிரீதியோடு "கூடியவனாய் எந்த ஸ்திரீயினின்றும் "உற்பன்னமாவானோ அவள் ஜாயை "எனப்படுவள்.

"இவ்வகையாய் எனது ஜாயை நீ "யொருத்தியே யாவாய். இவ் உனது "வசனத்தைக் கேட்டுப் பிரீதியோடு "கூடியவனாய் யான் நின்பானின்று "முற்பன்னமாயினே னாதலின், "நின்னைப் போன்ற விசாரமுடைய "ஸ்திரீகளே ஜாயை யெனக் கூறத் "தகுதியராவர்கள். மற்றுமுள்ள "இலௌகிக ஸ்திரீகளோ, அன்ன "வஸ்திர பூஷணாதி பதார்த்தங்களைக் "கேட்பதால் தங்கள் பதிகளை அனேக "வகைக் கிலேசத்திற் குள்ளாக்குவ "ராதலின் அவர்கள் ஜாயை யெனக் "கூறத் தகுதிப்படார்; மற்றோ, "லலனே, பாரியை என்பன முதலிய "நாமங்களா லழைக்கத் தகுதிய "ராவர்." என்று சாந்தோக்கியம் முறையிடுகின்றது.

தமது எண்ணப்படியே—தமது நலம் கருதியே பிறர் வாழ வேண்டுமென ஓவாது முயன்று காரணம் கற்பித்துக் கொண்டு பிறரை நேராகவோ இரை மறைவாகவோ நின்றுத் துன்புறுத்தும் சுற்றம் என்னும் வினை ரூபங்களும் இன்ன நீரனவே. கற்பனையாகிய கர்மாது சாரமாகிய உலக வாழ்க்கையிலே மனைவியும் மக்களும் சுற்றமும் பிறவும் ஒருவர்க்கு ஒழுங்குற அமையுமானால்—இனியனவாய் நிலைபெறுமானால் அவர் தவம் உஞற்ற வேண்டியது எதன் பொருட்டோ? முன்னிலை தன்னிலையானால்—தனக்கு மித்திரமானால் ஒருவன் செய்ய வேண்டிய தவம் வேறில்லை என்பது வேதவாக்கியம்.

பின் வரும்பிரமாணம் ஈண்டு நோக்கற் பாலது:

புறநானூறு

(191) யாண்டுபல வாக நரையில வாகுதல்
யாங்கா கியரென வினவுதி ராயின்
மாண்டவென் மனைவியொடு மக்களு நிரம்பினர்
யான்கண் டனையரென் னிளையரும் வேந்தனு
மல்லவை செய்யான் காக்கு மதன்றலை
யான்றவிந் தடங்கிய கொள்கைச்
சான்றோர் பலர்யான் வாழு மூரே.

(இ—ள்) நமக்குச் சென்ற யாண்டுகள் பலவாயிருக்க நரையில்லையாகுதல்

எப்படி யாயினீரெனக் கேட்பீராயின், என்னுடையமாட்சிமைப்பட்ட குணங்களையுடைய மனைவியுடனே புதல்வரும் அறிவு நிரம்பினர்; யான் கருதிய அதனையே கருதுவர், என்னுடைய ஏவல் செய்வாரும்; அரசனும் முறையில்லாதன செய்யானாய்க் காக்கும்; அதற்கு மேலே யானிருக்கின்ற வூரின்கண் நற்குணங்களால் அமைந்து பணியவேண்டுமுயர்ந்தோரிடத்துப் பணிந்து ஐம்புலனும் அடங்கியகோட்பாட்டினையுடைய சான்றோர் பலராதலான்—எ—று.

நமது தேகமே நமக்கு வசப்படாது பகையாய் அமைந்து கிடக்கின்றது.

## முக்கிய விஞ்ஞாபனம்

### திருஞானசம்பந்தர் தேவாரம்

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங்கொண்டான்கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பினுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணுதே போதியோ பூம்பாவாய்.

(பண் சீகாமரம் செ. 1.)

சுலி 5033-ம் ஆண்டாகிய சென்ற பிரஜோற்பத்தி வருடம் பங்குனி திங்கள் (16-3-1932) ஆதிரை நன்னாளில் எமது அருமை பெருமை வாய்ந்த தங்கை ஸ்ரீமதி மார்முத்தம்மையார் எம்பெருமான் திரோதானத் திருவடியில் திருத்தக ஒடுங்கினமையால் அன்னார் இரண்டாவது ஆண்டுத் திருநாள் விழவு, நிகழும் ஸ்ரீமுக ஆண்டு பங்குனித் திங்களில் 10-ம் தேதியாகிய சுக்கிரவாரமும் ஆதிரை நன்னாளும் கூடிய சுபதினத்தில் (23—3—34), திருவருளாணைப்படி நிகழ்த்தப்படும் ஆதலால், இத்திருநாளுக்கு முதல் நாளாகிய வியாழக்கிழமை (22-3-34) வெளிவர வேண்டிய எமது "வித்தகம்" இத்திருநாட் கொண்டாட்டம் காரணமான அவகாசக் குறைவால் அற்றைத் தினத்து வெளிவர முடியாமையால், இக்குறைநைய நிறை வாக்கி எமது சந்தா நேயர்களை மகிழ்வித்தற் பொருட்டு, இற்றைத் தினத்து(16-ம் இலக்க) வித்தகம், வழக்கமான 8 பக்கங்களோடு மேலும் 8 பக்கங்கள் சேர்ந்து 16 பக்கங்கள் உடையதாகி வெளிவருவதாயிற்று என்பதனை யாவருக்கும் மிக்க பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இங்ஙனம்
"வித்தகம்" உரிமையாளனும்
பொறுப்பாளனுமான
அடியவன்
R. நாகரத்தினம்.

அதனை வசப்படுத்தும் நெறியறிந்து வசப்படுத்திலனென்றி மனைவி மக்கள் சுற்றம் முதலிய முன்னிலைகள் நமக்கு வசமாக மாட்டா — ஏற்றவாறு அமையமாட்டா. சரீரம் வசப்பட்ட ஞான்று வாய்மையான — நிலைபெறுமனைவி மக்கள் சுற்றம் இன்னவர் என அறியப்படும் என்பது சத்தியம். பின்வரும் இருக்கு வேதப் பிரமாணத்தை நோக்குக.

### இருக்கு வேதம்.

அஷ்டகம் 2, அத்தியாயம் 6—மண்டலம் 2—சூக்தம் 23, வருக்கம் 28
மண்டலம் 2—அநுவாகம் 3-சுக்தம் 1 இருக்குக்கள் 19.

உதவிகொடு துயரொழிவி குசற்பதியே யெஞ்சார்வி னூக்கப் பேசிப்
புதல்வரொடு மெந்தனுவைக் காப்பாற்று மெய்மவனு முன்னைப் போற்று
லதிவிரைவின் வரவழைப்போம்; தேவர்களைப் பழிப்பவரை யடையக் கொல்க
மதியதனிற்கேபெடைத்தோருயர்ந்த சுகத்தமர்ந்தை மருவா தேய்க.

இ—ள் உன்னுடைய உதவிகளினால் பக்தர்களது துன்பத்தை யொழிக்கும் பிரஹஸ்பதியே! எங்கள் பக்கமாகப் பரிந்து பேசுபவனும், புத்திர

பௌத்திர ரூபமாயுள்ள எமது நங் அல்லது சரீரத்தைக் காப்பாற்றுபவனும் எம்முடையவனுமான உன்னை ஸ்தோத்திரங்களால் கூவி அழைப்போம். தேவ நிந்தகர்களை முற்றிலும் அழிப்பாயாக. துஷ்டபுத்தி படைத்தவர்கள் உத்கிருஷ்டதரமான சுகத்தையடையாமலிருக்கட்டும். (எ-று).

மனை மனையாள் என்பன ஒற்றுமை நயம் பற்றி ஒன்றெனக் கூறப்படுவது லௌகிகம் பாரமார்த்திகம் என்னும் இரண்டற்கும் ஒக்கும். லௌகிகம் வேறு பாரமார்த்திகம் வேறன்று. லௌகிகமே பாரமார்த்திகமாகித் திரியவேண்டும். அசுத்த பௌதிக தநுவே அமலமடைந்து வாய்மையான மனை—வீடு—மனைவி—சக்தி ஆகின்றதல்லவா? அநித்தியமே நித்தியமாகின்றதல்லவா? பாரமார்த்திகம் வாய்மை—நித்தியமானது. லௌகிகம் கற்பனை—போலி—அநித்தியமானது—இரியுந் தன்மையுடையது—தோன்றி மறையும் தன்மையுடையது. தோன்றி மறைதலே பிறப்பும் இறப்பும் எனப்படும். கற்பனையைக் கொண்டே உண்மையைக் கண்டு அடைதல் வேண்டும். வேறு வாயில் இல்லை. கற்பனையை நிறை கண்டு பஞ்சீகரணித்து—உறவுபடுத்தி உய்தியடைய அறியாது அதனை வெறுத்து—இகழ்ந்து—புறக்கணித்து ஒருபால் ஒதுங்கி, ஐம்பொறிகளையும் அடக்கும் நெறியறியாது அடக்கியும் பொய்யொழுக்கம் பூண்டும் அசேதனமாய் மாண்டுபோவது அறிவிலார் மாண்பு. கற்பனையின்றிக் காரியமில்லை. காரியங்களை உறவுபடுத்தியே அதன் வாயிலாகக் காரணத்தை—உண்மையை அறிதல் முடியும். இதனாற்றான் மனைவி வாழ்க்கைக்கு இன்றியமையாத வற்றுள்ளே தலைசிறந்தவளாயினள். கொண்டானிற் சிறந்த தெய்வம் இல்லை எனத் துணிந்து இல்லறம் நடாத்துதற் கேற்ற ஒழுக்கமும் வன்மையுமுடையளாய் அவன் வருவாய்க்கு ஏற்பச் சிக்கனவு மேற்கொண்டு ஒழுகும் சதுரப்பாடமைந்த வாழ்க்கையுடையளாய், தனது உறவினர் முதலிய பிறர் வசப்பட்டு அன்னவர் ஆக்கம் கருதித் தன் கணவனுக்கு அவச்சலனம் விளைக்காதவளாய், அவன் போக்கும் நோக்கும் நன்குணர்ந்து அவன் கூறுவனவற்றை எதிர்த்து வாதாடாது அவற்றிற்கு ஏற்றனவற்றைச் சாந்த மொழிகளால் பணிவொடு முறையிட்டு அவன் கருத்தின் வழியேயன்றிப் பிறவாறு அணுவளவும் ஒழுக முயலாதவளாய், தன்னைக் காத்துத் தன் கணவனையும் ஏற்ற ஏற்ற வகையால் பேணி ஒழுகும் உத்தமியே கற்பனை அத்தியாயத்தில் தலை சிறந்த வாழ்க்கைத் துணையாவள். கணவனது லௌகிக பாரமார்த்திகக் கிரியைகட்கும் துணைவராய் அவனது அரும் பெறல் ஆக்கையாகிய வாய்மையாகிய மனையை நிலைபெறச் செய்யவல்லார் இத்தகைய அருமை பெருமை வாய்ந்த பெண்மணிகளே யாவர். கணவன் ஆக்கம் கருதித் தவம் புரிவோரும் இவரே. இவர் சிந்தனை சொல் செயலெல்லாம் கணவன் ஆக்கம் கருதியனவே. இவரே ஞானநிலையுடையராய் உண்மை நிலை அடைதற்கும் அருகராவர். பண்டைக் காலத்தில் இத்தகைய உத்தமிகள் பலர் நமது தமிழ் நாட்டில் வதிந்து உண்மை நிலை அடைந்தனர் என்பது பழைய சரித்திரத்தால் அறியக்கிடக்கின்றது. எத்தனையோ இருடிகளுக்கும் முனிவர்களுக்கும் மனைவியராயினருட் பல்லோர் தம் தம் கணவரது தவநெறிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணைவராய் வதிந்து உண்மை நிலையும் அடையப் பெற்றனர். ஓதாதுணர்ந்த ஞானசம்பந்த வள்ளல் திருவாலவாய்த் திருப்பதிகத்தில் மறைமுழைத்த கனிவாய் விண்டு,

மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரி
[வளைக்கை மடமானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி பணி
[செய்துநாடொறும்பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகனால்வேத
[மும்பொருள்களுமருளி
அங்கயற்கண்ணிதன்னொடுமமர்ந்தவாலவா
[யாவதுமிதுவே.
(திருவாலவாய்,)

என முதற்கண் எடுத்துப் போற்றிப் புகழும் பேறு வாய்ந்த நின்றசீர் நெடுமாற நாயனார் என்னும் பாண்டியன் மனைவியாகிய மங்கையர்க்கரசியின் மாண்பு எம்மனோரால் போற்றும் தரத்ததாகுமோ? ஆ! ஆ! என்ன அருமை! என்ன பெருமை! இத்தகைய மங்கையர்க்கரசிகள் தற்காலம் தமிழ் நாட்டில் உளராயின் உலகம் தலை காலாய் கால் தலையாய் மாறி நிற்கும் இக்காலத்தில் சத்திய நெறியாகிய சைவம் நிலை நாட்டப்படாது ஒழியுமா! போலிக் கொள்கைகள் தலை எடுக்குமா?

நாயகரைத் தமது எண்ணப்படியே நடாத்த முயன்று பல்லாற்றானும் அவரை அவச்சலன மடைவித்துத் துன்புறுத்தும் போலியில் போலிகளாகிய மனைவியரே தற்காலத்தில் மலிந்துள்ளனரென்பது கண்கூடு. பின் வரும் தேவர் வாக்குக்கள் உத்தம மனைவியரின் இலக்கணத்தை நன்கு புலப்படுத்தும்:

## குறள்

மனைத்தக்க மாண்புடையளாகித்தற்
[கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.
(ஷை 6ம் அதி—வாழ்க்கைத் துணை நலம் 1.)

(இ-ள்.) மனைத்தக்க மாண்புடையளாகி—இல்லறத்துக்கு ஏற்ற அஃதாவது தன் கணவனது சரீரமாகிய இல் அழுது நிலை பெறுதற்கு ஏற்ற நற்குண நற்செய்கைகளையுடையளாய், தற்கொண்டாள் வளத்தக்காள்—தன்னைக் கொண்டவனுகிய அக்கணவனது வருவாய் எவ்வளவிற்றே அவ்வளவிற்றான சிக்கனவு பொருந்திய வாழ்க்கையினை உடையளாய் அவ் இல்லறத்தைக் கடைபோக நடாத்துபவளே, வாழ்க்கைத்துணை—அவன் இல் வாழ்க்கைக்குத் துணையாதற்கு உரியவள் (எ-று.)

நற்குணமாவன.—கணவன் மனம் அவச்சலன மடையாத வாறு அவன்

கருத்தின் வழியே குறிப்பறிந்து ஒழுகி அவன் தவத்துக்கு உறுதுணை யாதற் கேற்ற வாய்மை அடக்கம் பொறுமை முதலிய குணங்கள்.

நற்செய்கைகளாவன:—அவன் சரீர நிலைக்கு ஏற்றவாறு அவன் கற்பிக்கும் வண்ணம் உணவுகளை ஆக்கும் அட்டிற்றொழில் வன்மையும் பிறவுமாம்.

இத்தகைய மாண்பு உள் வழியே மனையறம் கடைபோக இயலுமாகலின் "மனைத்தக்க மாண்புடையளாகி" எனப்பட்டது. தற்சுதந்தரத்தால் முன்னிலைகளைக் கண்டு களித்தல் கருதியும் பிறர் ஆக்கம் கருதியும் ஒழுக முயன்று முதல் கெடும்படி விவகரிப்பவளாயின் அதனால் மறமும் துன்பமுமே உளவாகும். அறமும் இன்பமும் உளவாகா. ஆதலால் அவன் வருவாய்க்கு ஏற்றவாறு சதுரப்பாடு திகழ ஒழுகும் திறனுடையவளே மனைவியாதற் குரியவள் என்பார் "தற்கொண்டாள் வளத்தக்காள் வாழ்க்கைத் துணை" என்றார். "மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை, எனை மாட்சித்தாயினு மில்" எனக் கூறப்பட்டதும் அறிக.

இல்லதெ னில்லவள் மாண்பானா
[லுள்ளதெ]
னில்லவள் மாணாக் கடை

(ஷ—ஷ—ஷ—8)

(இ—ள்.) இல்லவள் மாண்பு ஆனால் இல்லது என்—ஒருவன் மனையாள் நற்குண நற்செய்கைகளை உடையளாயின் அவனிடத்து இல்லாதது என்னை? மாணாக்கடை உள்ளது என்—அவள் அத்தன்மையினள் அல்லளாய்த் தீக்குணம் தீச்செயல் உடையளாய விடத்து அவனிடத்து உள்ளது என்னை? என்பதாம்.

மனைவி மாண்புடையளாயின் கணவனிடத்து எல்லாம் உண்டு. அவள் மாண்பிலளாயின் அவனிடத்து ஒன்றும் இல்லை என்பது கருத்து.

நமது சரீரமாகிய—அசுத்த பௌதிக தநுவாகிய மனையானது—மனைவியானவள் விமல தநுவாக—விமலையாக மாறி மாட்சிமைப் பட்ட விடத்து நாம் நினைத்தவை யெல்லாம் முன்னே வந்து நிற்கும் என்பதும், அங்ஙனம் மாட்சிமைப் படாது அசுத்த தநுவாகவே நின்ற விடத்து நினைத்தவை கைகூடப் பெறாது நாம் இறந்து படுதல் திண்ணமாதலின் ஒன்றும் இல்லையாகும்—சூனியமே நிலவும் என்பதும் இக்குறளால் பெறப்பட வைத்தனர் தேவர் என்க. இவ்வாறு உலகியல் நோக்குவார்க்கு லௌகிகப் பொருளையும் உண்மையை நோக்குவார்க்குப் பாரமார்த்திக மாகிய உண்மைப் பொருளையும் பயந்து நின்றது இப்பொய்யா மொழி என அறிதல் வேண்டும்.

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர்
[பெருஞ்சிறப்புப்]
புத்தேளிர் வாழு முலகு.

(ஷ ஷ ஷ 8)

மனைவியரானவர் தம்மைக் கொண்ட கணவன் தம்மனதிற் பூரணமாகக் குடி கொள்ளும்படி அவரை வாய்மையாகத் தமக்கு உரியராகப் பெறுவாராயின் தேவர்கள் வாழும் பொன்னுலகத்திலுள்ள பெரிய போகங்களை யெல்லாம் அடையப் பெறுவார் என்பதாம்.

ஒருவன் சரீரத்தில் நாயகனாகிய சிவம் பூரணமாகக் குடி கொள்ளப் பெற்றால் அச் சரீரம் அமலமடைதலால் அவனுக்குப் பொன்னுலக வாழ்வும் இந்திரபோகமும் திண்ணம். பின் உண்மைத் துறவும் வீடு பேறும் உளவாதல் திண்ணம் என்னும் உண்மைப் பொருளையும் அடக்கி நின்றது இக் குறள் என்க.

இவ்வாற்றால் அறமுதல் நாற்பயனையும் ஒருவன் அடைதற்குக் கற்பனையாகிய மனைவி இன்றியமையாதவள் என்பது வெள்ளிடையாகின்றது. ஆதலால் மனைவி மக்கள் சுற்றம் முதலிய கற்பனைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்தே வாய்மையானவற்றை அடைதல் வேண்டும். இதனால் வீடுபேற்றின்பம் எனப்படும் தூய காமமும் அஃதாவது வாய்மையான இந்திர போகங்களும் வீடும் உளவாகும். நமது சரீரமே சரீரமாகிய வீடே விமலமாய் அமலமாய் நித்தியத்துவம் அடைந்து வாய்மையான வீடாகித் திரியும். அஃதாவது விமல வல்லியாய் ஞான சத்தி வடிவாய் அருளாய்வாய்மையானவீடாகும் என்பது. இருவினைசமப்பட்டபோது தான் வாய்மையான மனைவியை—"உருவளர் காமன்றன் வென்றிக் கொடி போன்று ஒளிர்கின்ற" விமல வல்லியைக் காணலாம். இருவினை சமப்படுதல் என்றால் — இருவினை சொரூபமாகிய உடலுயிர் சமப்படுவதென்றால் எளிதன்று. வியாபகமாகிய உலகமே முன்னிலையே நாம் உய்தியடைதற்கு வாயிலாதலால் அதனை வெறுத்தல் கூடாது; அவாவினால் அதனை விரும்புதலும் கூடாது. வெறுப்பும் விருப்பும் பாசமே — பற்றுக் கோடே யாதலின் என்க. ஆதலால் அளவோடும் நிறையோடும் அதனைப் பஞ்சீகரணித்து உறவு படுத்துதல் வேண்டும். அகலாது அணுகாது தீக்காய்வார் போல அதனை வெறுத்தலும் விரும்புதலும் இன்றி அதனை உறவு படுத்துதல் வேண்டும். ஆலத்தை அமுதமாக்குதல் வேண்டும். ஆக்குதலாற்றான் நஞ்சணிகண்டனாகிய எம்பெருமான் அருளைப் பெற்று நாமும் நஞ்சணிகண்டராகலாம்—சர்ப்பாபரணர் ஆகலாம். மனைவி மக்கள் சுற்றம் என்னும் இவர்களின் பாசம் — பற்றுக்கோடு பொல்லாது. ஆயினும் மனைவி முதலிய இக்கற்பனைகளை ஓம்புதல் வேண்டும். ஓம்புதல் என்றால் என்னை? இதுதான் பெரிய பிரச்சினை—கடா. உலகமாக்கள் அறியாத பொருள் இஃதொன்றே. மனைவி மக்கள் என்னும் பிடிப்பால் கவரப்பட்டு—பாசத்தினால் உந்தப்பட்டு அவரை ஓம்பல் என்பது பெரிய தவறு

மற்றோ, ஈசன் திறம்படவும் தவம் உஞற்றவும் துணைக் கருவிகள் என்ற முறையில் அவரை ஓம்பல் வேண்டும். இது தான் ஆலத்தை அமுதமாக்குவ தென்பது. இதன் உட்பொருள் தெளிவாக விளக்குவது மிக அரிது. நிக்கை பெற்றவர்க்கன்றி ஏனையோர்க் குச் சிறிதும் புலனாகாது. இதனை அநுபவமாக உணர்ந்த — திருநாப் பேறு பெற்ற எமது அப்பர் பின்வரு மாறு அருளியதன் உண்மையும் இதுவேயாம்:

## அப்பர்

மக்களே மணந்த தாரமவ்வயிற்றவரை [யோம்பும்
சிக்குளே யழுந்தியீசன்றிறம்படேன்றவம [தோரேன்
கொப்புளே போலத் தோன்றியதனுளே [மறையக்கண்டும்
இக்களேபரத்தை யோம்பவென்செய்வான் [றோன்றினேனே.
(குறைந்த—திருநேரிசை. 2.)

இவ் வழகிய பாசுரத்தில் மனைவி மக்கள் என்னும் அவ்வயிற்றவரை ஓம்புவதனால் ஈசன் திறம் படவும் தவம் உஞற்றவும் முடியா என அருளியதோடும் அமையாது அவர்களை ஓம்பாது ஒன்றும் கை கூடாது — முடியாது — சித்திக்காது என்பதையும் சுட்டாமல் சுட்டி, அவர்களைப் புறக்கணித்தலால் காரியக் கேடேயன்றிக் காரிய சித்தி சிறிதும் இல்லை என்பதனையும் உள்ளே அடக்கி "இக் களேபரத்தை ஓம்ப என் செய் வான் தோன்றினேனே" என முடித் தருளினர். அப்பன் இதனை உண்டு விண்டவன். மாணிக்கம் இதைக் கண்டவன். ஏனைய மெய்யடியாரும் இப்பெற்றி வாய்க்கப் பெற்றவரே யாவர். அஃதில மாக்களாகிய காமுகர் என் செய்வர்? இவ் வுண்மைகளை அறியாத காமுகராகிய பாமரர் சிலர் இப்பாசுரத்துக்குத் தம் மனம் போன வாறு விபரீதப் பொருள் கண்டு சிவா பராதிகளாயினர். தத்துவப் பெரியார் பாடல்களுக்கு வித்துவப் புலிகள் பொருள் கூற முயல்வது பாதகமே என்பது இதனால் நன்கு புலப்படும்.

இப்பற்றுக்கோடு என்னும் சாகரத்தை விட்டு நீங்கி வேறு தடம் புகுந்து படியேற்றம் பெறுவதென் பது—முத்தியடைவதென்பது முயற் கொம்பே யாகும். அதினின்றும் ஆக்கமுற்ற நாம் அதினின்றே படி யேற்றம் பெறவேண்டும். "கொப் புளே போலத் தோன்றி அதனுளே மறையக் கண்டும் இக்களேபரத்தை" விட்டு நீங்காது இதனை ஓம்புதலே பெரிய தவம் என்க. ஓம்பாது நீங்கு தலும் முடியாத காரியம். இதனால் மனைவி மக்கள் சுற்றம் என்னும் கற் பனைகளில் அன்பு காட்டிச் சிக்கிக் கொண்டு ஆந்தையைப் போல் விழித்து அவச் சலனமடைவதே சிறந்த மார்க்கம் என்று கூறப்பட வில்லை. மற்றோ, இக் கற்பனைகள் நாம் கைக்கொண்டொழுகும் அறத்தாறு களால் மனதினின்றும் அணு அணு வாக அகன்று விடும் என்றும் இதுவே பெரியதவம் என்றும் கூறப்பட்டது என்க. இப் பெற்றி வாய்மை பெறு மாயின் அஞ்ஞான்று திருநாவுக்கரை யன் அருளிய பாசுரத்தின் உண்மைப் பொருள்—மறை பொருள் வெட்ட வெளிச்சமாகும். இவ் உண்மையில் நிலைதானும் அறிவது முடியாத காரியம். "தாயோடு கண்மூடித் தழுவி" நிற்கும் சகச நிட்டையா ளரே இவ் உண்மைகளைப் பூரண மாக—அநுபவமாக அறிய வல்லரா வர். இத் தன்மை வாய்ந்த மெய்யடி யாரை உலகமாக்கள் அறிவது முடி யாத காரியம். வாய்மையான துறவு இன்னது என அறியும் ஆற்றலில்லா தார், மனைவி மக்கள் முதலிய முன்னி லைகளுக்கு ஆற்றாது—அம் முன்னிலை களை நிறை கண்டு பஞ்சீகரணிக்க அறி யாது—உறவு படுத்த அறியாது அவைகளை வெறுத்துக் கிடத்தலே துறவு எனக் கூறுவர். தமது ஆக்கத் துக்கு உரிமையில்லாத வேறு முன்னி லைகளில் பற்றுவைத்து மேலும் விருப்பு வெறுப்பாகிய பற்றுக்கோட் டையே பெருக்கி அவதியுற்றுச் சாத லடைவர். முன்னிலைகளை வெறுத்து ஐம்புல நுகர்ச்சியின்றி அசேதன மாதலே துறவு என்பவர் தன்னிலைச் சிற்றின்பமும் முன்னிலைச் சிற்றின் பமும் கூடிக் குழைதலால் பேரின்ப முளை அங்குரம் பெறும் என்னும் வேத உண்மையை அறிவது எப்படி? "சிற்றின்பம் பொல்லாது" என அதனை அறவே ஒழித்து மாதர்களை விட்டு நீங்கி—கற்பனைகளை விட்டு நீங்கி வேறு எங்கோ ஓரிடத்தில் குவிந்துகிடக்கும் பேரின்ப சுகத்தைப் பெறவேண்டும் எனவும் அதுவே வாய்மையான துறவு எனவும், சந்நி யாசம் எனவும், முத்தி நெறி எனவும் ஓலமிடும் அறிவிலிகளுக்குப் பின் வரும் திருமூலர் திருவாக்கு உண் மையை அறிவுறுத்தும்.

## திருமந்திரம்

பயனுறு கன்னியர் போகத்தினுள்ளே
பயனுறு மாதி பரஞ்சுடர்ச்சோதி
அயனொடு மாலறியாவகை நின்றிட்
டுயர் நெறியா யொளியொன்றதுவாமே.
(ஷை 9ம் தந். 9வது ஆகாசப்பேறு. செ. 4.)

உண்மையை உள்ளவாறு ஒருவன் கூறுவானாயின். அதனை உலகம் நம் பாது. இயற்கை இதுவே. பின்வரும் பிரமாணமும் இதனை உறுதிப்படுத்து கின்றது.

## இடைக்காடனர்

அண்டா ருலகோர் கண்டதே கூறலி
னெண்டொடி முயக்கப் புணையெனச் [செழித்துய
ரில்லற வாழ்விற் சேத்புரை யிதுவால்.
(மூவடி முப்பது-காமம்-4.)

உடலுயிர் சத்தியும் சிவமுமாய் அமைந்துள்ளன. இவை ஒன்றுறக் கூடிக் குழைந்து அள்ளூருக்கையாய்ச் சூக்குமமாய் நித்தியத்துவம் அடையும். இதற்கு உலகப் போலி நிலையிலும் தம்பதிகளாய் வாழுதல் இன்றியமை யாத தென்பது சொல்லாமலே அமை யும். என்னை? உண்மை நிலை அடை தற்குக் கற்பனைகளாகிய முன்னிலை

களே வாயில் என்பது வேத உண்மையாதலின் என்க. மெய்யடியாரெல்லாம் இவ்வாறு முன்னிலையை நிறை கண்டு பஞ்சீகரணித்தே—உறவு படுத்தியே உய்தியடைந்தோராவர். அவ் அடியவர் சரித்திரங்களை—வாய்மையான ஒழுக்கங்களை எவர் அறிவர்? அவையெல்லாம் அவர் காலத்து அவர்க்கு அணுக்கராய் இருந்து பூரணமாக அவற்றை அறிந்தோர் எவராலாவது எழுதிவைக்கப் படவில்லை என்பது வெள்ளிடை. விரிப்பிற் பெருகும்.

மனைமாட்சியே ஒருவர்க்கு மங்கலமாவது— இலக்ஷ்மீகரமாவது—இலக்குமியை அடையச் செய்வது. மனைமாட்சிக்கு நற்பயன் நன்மக்கட் பேறு எனப்படும். இஃதும் லௌகிகம் பாரமார்த்திகம் என்னும் இரண்டற்கும் ஒக்கும். வாயமையான புத்திரப் பேறு இன்னதென்பது அமயம் நேர்ந்துழி விளக்கிக் கூறப்படும்.

இதுகாறும் கூறியவைகளால் நமது சரீரமே வாய்மையான மனை—மனைவியாகும் என்பதும், வாய்மையான மனைவியை அடைதற்குக் கற்பனையாகிய மனைவி இன்றியமையாதவள் என்பதும், லௌகிகமே பாரமார்த்திகமாகத் திரியவேண்டிய தென்பதும், கற்பனைகளை நிறைகண்டு பஞ்சீகரணித்தாற்றான் வாய்மையான பெண்டிர் மக்கள் சுற்றம் காணப்படும் என்பதும் இதனாற்றான் வீடு பேற்றின்பமும் வீடும் கைகூடும் என்பதும் விளக்கப்பட்டன.

சுபம்.

---

( 7-ம் பக்கத் தொடர்ச்சி )

ஆமா றிற்சிவ ஞாருள் பெற்றுளோர்
போமலர் தன்னுற் புகழ்விந்து நாதம்விட்
டோமய மாகியொடுங்கலி னின்மலந்
தோமறு சுத்தா வவத்தைத் தொழிலே.
(ஷை கேவலசகல சுத்தம் 7.)

பெருநெறி யான பிரணவ மோர்ந்து
குருநெறி யாலுமை கூடினல் வேதத்
திருநெறி யான திருவை யிருத்திச்
சொருபம தானோர் துகளில் பார்ப்
[பாரே”

மஹா மஹோபாத்யாய தாக்ஷிணாத்ய
கலாநிதி டாக்டர் பிரம்ம
ஸ்ரீ உ. வே. சாமிநாத ஐயரவர்களின்
மாணாக்கரும்,

சிதம்பரம் ஸ்ரீ மீனாக்ஷி தமிழ்க்
கலாசாலையில் கற்றவரும்,

சென்னை சர்வ கலாசாலையாரால்
வித்வான் பட்டம் பெற்றவரும்,

பருத்தித் துறை சார்ந்த
மேலைப் புலோலி வாசருமாகிய

வித்வான் ஸ்ரீமாந்

சு. நடராச பிள்ளையவர்கள்

வழங்கிய வித்தக வாழ்த்துப்பா.

---

செந்தமிழ் மொழியிற் றிகழ்தரு மிதழ்கள்
நந்தமிழ் நிலத்து நனிஉள வேனும்
சைவப் பொருடரு தனிப்பெருந்
[தொண்டு
மெய்வர் தலவிட வெளிவரு மவைதாம்
மிகச்சில வெனினும் விளங்குதம்
[பெயர்க்குத்
தகப்பொரு டெரிக்குந் தன்மைய வரிதே
என்றுயர் சுருத்தான் இப்புவிக் கணியென
நின்றிடு புதுவை நீணகர் வளரும்
“நந்தி வெளியீட்டு மன்ற”நன் மக்கள்
நந்தி மலர்ந்தருள் சிந்தைகொள் போதம்
நால்வரின் தமிழ்மறை நான்குதொல்
[வேதம்
மேல்வரு மேனைய மெய்ந்நூல் பலவும்
கொண்டருஞ் சைவக் கொள்கையை
[விளக்கிப்

---

(பிரணவம்-மகரவித்தை குருநெறியால் உரைகூடி—சற்குருநாதன் அருளிய சாதகயோகங்களை வழுவற அநுட்டித்து, திருகு—மாறிப் பிறத்தல்; துவிசத்துவம, சொருபம்—ஓ வடிவம், துகளில் பார்ப்பார்—உண்மைப் பார்ப்பார்.]

(ஷை அந்தணர் ஒழுக்கம் 4 )

“வேதாந்த மென்பது வேட்கை ஒழிந்தி
[டம்”
“நந்தி யருளாற் சதாசிவ னாயினேன்
நந்தியருளாலே நானிருந்தேனே”
( ஷை திருமூலர் வரலாறு 20 )
( தொடரும் )

இலங்கை தக்ஷிண கைலாயம்
என்னும் திருக்கோணமலை சிறுன்
ஸ்ரீமாந்

சி. க. த. உமாபதி சிவம்

அவர்கள் வழங்கியது

இத்தலம் தோறும் உள்ளார் பலர் கைத் தலம் தன்னில் வித்தகம் என விளங்கிப் புத்துயிர் அளிக்கும் “வித்தக”ப் பத்திரிகையே! நீ நீடு வாழ்க! உனது ஆசிரியர் நீடுவாழ்க! எத்தகை யினரும் பத்தியாய் நின்னைப் படித்து மறுமை வித்தெனக் கண்ட முத்தியை அளிக்கும் சத்திய நெறி காட்டுபவன் நீயே எனக் கண்டனர்! மற்றுச் சார்பு அதற்கு ஏதோ? சத்திய ஞானமும் பொருளுண்மை சாற்றிடும் குரவ! நின்தாளிணை தமியனேற்கு உரித்தே!

சி. க. த. உமாபதிசிவம்

---

பண்டுயர் சைவப் பயிரினை விளக்கும்
வித்தகம் பதியப் புத்துணர் வோங்க
“வித்தகம்” என்றஇப் பத்திர
[மொன்றைப்
புதுவையின் கண்ணே புதுவதா நாட்டிப்
புதுமையி னோடும் புரிந்தன ரன்றே
திரையமு தண்ட தேவரின் குருவாம்
உரைசால் வியாழ னேங்கிடு வாரம்
இமிழ் கடலுலகி னென்றும் நிலவுந்
தமிழமு துண்ணுந் தன்மைய ரான
மக்களுக் கருளும் வயங்குறு பொருள்கள்
இக்கென வினிக்க இலங்கிடு மரிய
வித்தகம் வாழி! வித்தகம் வாழி!!
இத்துறு கடன்மண லத்தனை யாண்டு
வித்தகம் வாழி!!! இத்தரை தனிலே.

---


## “வித்தகம்”

வருட சந்தா முன் பணம்
இந்தியா, பர்மா, சிலோன் ரூ. 3–0–0
மலாயா, சிங்கப்பூர், சைகோன் } ரூ. 4-0–

வித்தக நிலையம்,
புதுச்சேரி.


---

## அறிவிப்பு

கடிதர்களின்
அபிப்பிராயங்களுக்கு
அவர்களே பொறுப்பாளிகள்.

## திருவாசகம்

"பாணனேன்படிற்றாக்கையைவிட்டுனைப்
பூணுமாறறியேன்புலன் போற்றியே"
(திருச்சதகம் 44).

"மலமாக்குரம்பையிது மாய்க்க மாட்டேன்
[மணியே யுனைக் காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன் என்கொண்
டெழுகே னெம்மானே"

"ஊனார் புழுக்கூ டிதுகாத்திங் கிருப்ப
[தானே னுடையானே"
(ஷை 54, 55)

"உடலிது களைந்திட் டொல்லை யும்பர்தந்
[தருளு போற்றி"
(ஷை 64).

"நின்கழற் போது நாயினேன்
கூடவேண்டும் நான் போற்றி யிப்புழுக்
கூடு நீக்கெனைப் போற்றி பொய்யெலாம்
வீடவேண்டும் நான் போற்றி"
(ஷை 100).

"பரியா உடல் தன்னைச் செற்றிலேன்"
"காயமாயத்தைக் கழித்தருள் செய்யாய்"
(செத்திலாபத்து 2, 5).

"இறகுடிவிது சிதையக் கூவாய் கோவே"
"செடியாராக்கைத் திறமற வீசி"
(ஆசைபத்து 3, 9.)

"நாறேனோர் தோளாச் சுரை ஒத்தால்
நம்பி இனித்தான் வாழ்ந்தாயே"
(பிரார்த்தனைபத்து 10).

"செடி சேருடலைச் சிதையாத தெத்தக்
[கெங்கள் சிவலோகா
(குழைத்த பத்து—2)

## அப்பர் தேவாரம்

"சித்தமைச் செம்புதன்னைச் செடிகொ
[ளுடல் வடிவொன்றில்லா
மத்தையைக் கழிக்கும் வண்ணம் உணர்வு
[தா உலக மூர்த்தி"
(தனித்திரு நேரிசை–7.)

அமல நிறையாகிய சிவம் ஆக்கமுறப் பெறுதலால் அசுத்த நிறையாகிய பாசம் ஒழிந்து தாம் கடைத்தேறிய உண்மையை அதிசயபத்து 7, 8, 9, 10,–ம் செய்யுட்களாலும் அற்புத பத்து 8-ம் செய்யுளாலும் பிறபல செய்யுட்களாலும் மணி வாசகர் நன்கு விளக்கியருளினர். இவை யெல்லாம் சண்டுவிரிப்பின் மிகப் பெருகும். தூலத்துள்ள அசுத்த நிறை நீங்கப் பெறுதார் அதன் காரியமாகிய காமம் கோபம் முதலிய குணங்கள் நீங்கப் பெற்றார் என்பது வெற்றுரையே யாகும். மருளுடம்மை மாற்றிச் சாவா உடம்பாகிய ஒ வடிவம் என்னும் "ஈனமில்காயம்" பெறுது, அம்மருளுடம்பு பிணமாக விழ மாண்டுபோனவர்களுக்கு முத்தி என்பது முயற்கொம்பேயாகும். மருளுடம்பை மாற்றி நித்தியத்துவம் அடைய வேண்டும் என்னும் உண்மையையே, "பூந்துருத்தி பூந்துருத்தி என்பீராகில் பொல்லாத புலாற்றுருத்தி போக்கலாமே" என்னும் மறைமொழியால் இப்பேயுலகத்தில் உயிர்ந்தார் எல்லோருக்கும் பெரியவராகிய நமது அப்பர் உமிழ்ந்தும் என்னை? இதனைக்கொள்வார் யாரும் இல்லையே! தற்காலச் சைவர்களுட் பெரும்பாலார் "சரீரம் அழிந்துவிடும் அழிந்தேவிடும். அதனைப் பொருட் பண்ணக்கூடாது. அதில் அழுத்தம் வைக்கப்படாது. சரீரம் பழுதடைந்து பிணமாக விழுந்தபின் அதனைப்பிரிந்த உயிர் யாரும் அறியாமல் இரகசியமாகக் கடவுளை அடைந்து அவரோடு இரண்டறக் கலந்து விடும்" என்று இப்புலால் துருத்தியைப் பூந்துருத்தியாக்க வேண்டும் என்ற அப்பர் அருள் வாக்குக்கு எதிர்மறையாகவே பிரசாரஞ் செய்து சாதலடைகின்றனர். இப்புலாற் றுருத்தியைப் பூந்துருத்தியாக்க வேண்டும் என்ற பொருளே அப்பொருளுக் கேற்ற உணர்ச்சியுமே மறைந்து கிடந்து விட்டன என்றால் மற்றவைகளைப் பற்றிப் பேசுவதென்னை? திருவாசகம் தேவாரம் என்று வாய்ப்பறையாகச் சாற்றித்திரிபவரேயன்றி அவற்றின் உண்மைப் பொருளை உணர்ந்து ஒழுகும் மதிப்பொலிவுடையார் உளராயின் அவர் அவற்றை அருளிய அத்தத்வப் பெரியார் அடைந்த உண்மை நிலையை அடையாமல் இருக்கமுடியுமா? தத்துவப் பெரியாராகிய எம்பெருமக்கள் நாட்டிய சத்திய நெறி பன்னெடுங்காலமாக மறைந்து கிடக்கின்றமையாலன்றோ தற்காலம் தமிழ் நாட்டில் அசத்தியமே வெளிப்பட்டுத் தாண்டவம் புரிகின்றது! தத்துவப்பெரியார் அருளிய தமிழ் மறைகளின் உண்மைப் பொருள் பலர்க்கும் மறைந்து கிடந்து விட்டமையாலன்றோ இயற்கையோடு ஒத்து நிற்றலாகிய அரிய பெரிய சகச நிட்டையால் உடலும் உயிரும் ஒழிவற ஒன்றிச் சூக்குமமாய் முறையே காரணத்தில் ஒடுங்குதலாகிய பழைய உண்மைச் சைவக்கொள்கை மறைந்து, காயம் பிணமாகக் கழிந்த பின் உயிர் அரன்போல் நிற்கும் என்னும் புதிய போலிக்கொள்கை வெளிப்பட்டு, நம்மவரெல்லாம் "உற்றவாக்கையின் உறுபொருள்" (திருவாசகம்) ஆகிய எம்பெருமான் திருவடியை நாடி அடைந்து நித்தியராகும் ஆற்றலும் காதலும் இல்லாது "பெற்றவா பெற்றபயனது நுகர்ந்திடும் பித்தர்" (மேற்படி) ஆகிப் புலையும் கொலையும் களவும் தவிராப் பேர்வழி மானிடராய் அவச்சலனமடைந்து ஆகாமியங்களை ஈட்டி மூலாக்கினி மேலெழுந்து அப்புக்கூற்றுக்கு அடக்கமாகி ஐ என்னும் சிலேட்டுமம் மேலிடுதலாகிய சன்னி என்னும் யமவெதனையை அடைந்து அவ் அரும்பெறல் ஆக்கையைப் பிணமாக விடுத்து மாண்டு போகின்றனர். நம் உயிர்க்கு இரங்கி எம்பெருமான் அருளால் இத் தற்கொலையைத் தவிர்த்து இன்புற அறியாத நாம் பிற உயிர்களுக்கு இரங்கும் சிவகாருண்யம் உடையோம் என மகிழ்வதும் அறியாமையன்றோ! இதன் திறமெல்லாம் சண்டு விரிப்பிற் பெருகும். இதுகாறும் கூறியவைகளால் "நத்தம்போற் கேடும் உளதாகும் சாக்காடும், வித்தகர்க்கல்லால் அரிது" என்னும் தேவர்வாக்கின் உண்மைப் பொருள் ஒருவாறு உணரப்படும்.

# புத்தக மதிப்புரை

## வீரசைவ விளக்க வினாவிடை

இந்நூல், ஆகமாந்தமாகிய சிவாத்துவித சைவ சித்தாந்தம் எனப்படும் வீர சைவ உண்மைகளைக் கற்றோரும் மற்றோரும் எளிதின் உணர்ந்து உய்யும் வண்ணம் வினா விடைகளால் இனிது விளக்கிக் கூறுகின்றது "நான் யார்" "வீரசைவம்" லிங்காங்க ஸாமரஸ்யம்" என்னும் மூன்று பிரிவினை யுடையதாய், முதலாவது பிரிவில் ஆத்ம சொரூப உண்மையையும், இரண்டாவது பிரிவில் வேதாகமங்களால் பிரதிபாதிக்கப்படும் சைவ சித்தாந்தம் சிவாத்துவிதமே என்பதனையும், அதன் உண்மைகளையும், அநுஷ்டான முறைகளையும், சிவலிங்க மகத்துவம் சிவலிங்க தாரண விசேடம் என்பனவற்றையும், தீக்கை முறைகளையும், பதிபசுபாச இலக்கணங்களையும், மூன்றாவது பிரிவில் தத்துவமசி மகாவாக்கியப் பொருளாகிய அங்கலிங்க ஐக்கிய உண்மையையும் வேதம் ஆகமம் உபநிடதம் புராணம் ஸ்மிருதி முதலிய வற்றிலுள்ள அரிய பெரிய பிரமாணங்களோடு நன்கு வற்புறுத்தி விளக்குகின்றது. இவ்வாறு சிவாத்துவித சைவ உண்மைகளெல்லாம் பிரபல பிரமாணங்களோடு இந்நூல் சுருக்கக் கூறி விளக்குகின்றமையால், இதனைப் படிப்போர் சித்தாந்தசிகாமணி, வசவபுராணம் முதலிய வீரசைவ அருநூற் பரப்புக்களையெல்லாம் ஆய்ந்துணரும் ஆற்றலுடையவராவர் என்பதில் ஐயமில்லை. சிவாத்துவிதமே உண்மைச் சைவ சித்தாந்தம் எனப் பிரதிபாதிக்கும் வேதப் பிரமாணங்களும் வாதுளம் முதலிய திவ்விய ஆகமப் பிரமாணங்களும் இந்நூலிற் பரக்கக் காணப்படுகின்றன. இத்தகைய அரிய நூலை இயற்றியோர் யாவர்? எனின், அவர்தாம் சேல நகரத்துச் செவ்வாய்ப் பேட்டை வாசரும், வீரசைவ சென்ன டகணவயா செட்டியார் அவர்கள் அருந்தவப் புதல்வரும், சம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் தக்க பாண்டித்திய முடையவரும், வேத சிவாகமாதி பல சாஸ்திர விற்பன்னரும் சித்தாந்த சிகாமணி என்னும் அரிய பெரிய சாஸ்திரத்துக்கு உரை எழுதி வெளியிட்டவரும், சிவாத்துவித சித்தாந்த உண்மைகளை வெளியிடுவதையே தமது முக்கிய சிவ கைங்கரியமாகக் கொண்டுள்ள மஹோபகாரியும், சிவாத்துவித சைவ சித்தாந்த பாநுவுமாகிய ஸ்ரீமாந் நாகி செட்டியார் அவர்கள் என்று கூறப்படும். 372 வினாக்களாலும் அவற்றிற் கேற்ற எடுத்துக் காட்டுகள் அமைந்த விரிவான விடைகளாலும் வீரசைவ உண்மைகளைத் தடக்கை நெல்லிக்கனி என விளக்கமுற உரைக்கும் இந்நூலையும் இதுபோன்ற பல நூல்களையும் இயற்றி வெளியிட்ட இவ் ஆசிரியருக்குத் தமிழுலகம் மிகக் கடப்பாடுடையதே என்பது மிகையன்று. யாவர்க்கும் பயன்படுதல் கருதியே 241 பக்கங்களையுடைய இந்நூல் 12 அணுவாக மிகக் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றது. விசேஷமாகச் சைவசன்மக்களாலும் சமய ஆராய்ச்சி விநோதராகியப் பிறராலும் இந்நூல் ஆவசியம் பெற்றுப் படிக்கற் பாலதேயாகும்.

சே. நாகிச் செட்டியார்.
பார்க் டவுன்,
. சென்னை,

என்ற விலாசத்துக்கு எழுதிப் பெறற்பாலது.

## மணிவாசகப் பெருமான் வரலாற்று விடை

ஷை ஆசிரியரால் இயற்றி வெளியிடப்பட்டது. சிறிது நேரம் நூலமாகப் பார்வையிட்ட அளவில், இந்நூல், வேதாகமோக்தசிவாத்துவித சித்தாந்தமே மணிவாசகர் கைக்கொண்டொழுகிய சமயம் எனப் பிரமாண சகிதமாக வற்புறுத்துவதாகப் புலப்பட்டது. திருவாசக அச்சுப் பிரதிகளில் காணப்படாத சில செய்யுட்களும் கர்ண பரம்பரையால் கிடைக்கப் பெற்றன என்று இந்நூலில் காட்டப்பட்டுள்ளன. தத்துவமசி வாக்கியப் பொருளாகிய அங்கலிங்க ஐக்கிய நெறி என்னும் உண்மைச் சைவ நன்னெறியே சற்குரு நாதனால் மணிவாசகருக்கு உபதேசிக்கப் பட்டதென்பது திருவாசகத் திருமறையாலும், அப்பெருமான் அடைந்த உண்மை முத்தி நிலையாலும் வெள்ளிடையாகின்றது. இந்நூலில் காணப்படும் சில அம்சங்கள் அமயம் நேர்ந்துழி ஆராய்ந்து விளக்கப்படும், இந்நூல் ஷை ஆசிரியரிடம் பெறற் பாலது.

## கதிர்காம ஸ்வாமி தோத்திரம்

ஈழமண்டலத்திலே திருப்புகழ் பெற்ற சுப்பிரமணிய ஸ்தலங்களுள்ளே சிறந்ததாகிய கதிர்காமத் திருப்பதியில் கோயில் கொண்டருளிய முருகக்கடவுள் மீது பாடப்பட்ட அஷ்டகம், பதிகம் போற்றி விருத்தம் என்பன இதனுள் அடங்கியுள்ளன. அஷ்டகம் சம்ஸ்கிருத பாஷையில் சிறந்த அறுபடுப் சுலோகங்களால்

## மயூரகிரியுலா.

இந்நூல், கோநகர் வாசியும், சிவநேசரும், செழுந்தமிழ்ப் புலவருமாகிய ஸ்ரீமாந் சு. மு. இராம சுப்பிரமணியன் செட்டியார் அவர்களால், மயூராசலம் என்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் முருகக் கடவுள் மீது சிறந்த கலி வெண்பாவினால் பத்திச்சுவை ததும்பப் பாடப்பட்ட பிரபந்தமாகும். முருகக் கடவுள் திருவுலா மாண்பை நன்கு தெரிக்கின்றது. "உற்ற ஆக்கையின் உறு பொருள்" ஆகிய எம்பெருமான் தமது உடலமாகிய புரத்துள் அணு அணுவாகக் குடி புகுதலாகிய திருவுலாப் போதுங்கால் "தேங்கடம்பின் மால்பட்டழிந்தது பூங்கொடியார் மனம்" (கந்தரலங்காரம்) என்றவாறு சரீரமாகிய நாயப்பெண் அடையும் பருவ வேறுபாடுகளும், அவற்றுலாம் பரமானந்தப் பேறும், அன்னவன் சாங்கோபாங்கப் பிரத்தியங்கங்களையும் அருட் செயல்களையும் அழகுற வர்ணித்துப் போற்றிய இந்நூற் கற்பனைகளால் நன்கு புலனாகின்றன. இந்நூலாசிரியர் கவிவன்மையும் முருகவேள் பத்தியும் பாராட்டற் பாலனவே. மகிபாலப்பதி பண்டிதமணி ஸ்ரீமாந் கதிரேசச் செட்டியார் அமராவதி புத்தூர் மகாவித்வ சிரோமணி ஸ்ரீமாந் இராமநாதன் செட்டியார் முதலிய வித்துவப் பெரியார் பலர் சிறப்புக்கவிகளால் இந்நூலைப் பாராட்டியமை பொருத்தமானதே. செட்டியார் அவர்கள் மேலும் இவ்வாறான பிரபந்தங்களை "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" ஆகிய எம்பெருமான் மீது உருத்தி அன்னவன் கருணைக்கு இலக்காகும் வண்ணம் திருவருளைப் போற்றுகின்றோம். இதன் விலை அணா 2 ஷை செட்டியார் அவர்களிடம் பெறற் பாலது.

"மயூரகிரியுலா" முதலிய அரிய பிரபந்தங்களை இயற்றிய செழுந்தமிழ்ப் புலவரும்,
சிவநேசருமாகிய கோநகர்
ஸ்ரீமாந்
சு. மு. இராம சுப்பிரமணியன் செட்டியாரவர்கள்
வழங்கிய
ஆசிரியப்பா

திருவருட் டுணையே மருவிடப் புதுவை
நன்னக ரிருந்து பன்னல மாருஞ்
சைவசித் தாந்தத் தெய்வ மணங்கமழ்
கட்டுரை பலமிகுந் தெட்டுணை யுஞ்சிவ
பற்றமி லாரு முற்றிய வதுவுறத்
தந்திர மிகவறி கந்தைய பிள்ளை
வெளியிட வுலகத் தொளிர்தரு மேன்மை
வித்தக மெனும்பெயர்ப் புத்தகப் புதின
மன்னு ரன்பு மன்னிய வதனால்
நான்பெறும் பாக்கியந் தான்பெற
[வுற்றேன்
தமிழ்மொழி சமய மகிழ்திரைப் புவியில்
தேவொ ரற்று வரமெய்க் காளினில்
அன்ன விரண்டும் பன்னரு மாக்கம்
பெற்றிடத் தோன்றிய கொற்ற
["வித்தகம்"
வாழிமா நிலத்து வாழியல் லூழியே

அமைக்கப்பட்டுள்ளது. பதிகமும் போற்றி விருத்தமும் சிறந்த செந்தமிழ் விருத்தப் பாக்களால் அமைந்து படிப்போர் மாட்டுப் பத்திமை நிகழ்விக்கும் பான்மையவாய் மிளிர்கின்றன. இவற்றை இயற்றியோர் யாழ்ப்பாணம் புலோலி சம்ஸ்கிருத திராவிட மகா பண்டிதரும் சிவநேசருமாகிய பிரம்மஸ்ரீ ம. முத்துக்குமாரசுவாமிக்குருக்கள் அவர்களிடம் கல்வி பயின்று வித்துவத் தன்மையும் குருத்துவமும் பொலிந்து விளங்காநின்ற பிரம்மஸ்ரீ த. சாமிநாதசர்மா அவர்கள் ஆவர். இளமைப்பருவத்திலேயே இத்தகைய கவிகளை இயற்றும் வன்மைவாய்ந்த இவர்கள் "முத்தமிழால் வைதாரையும் அங்கு வாழவைப்போன்" ஆகிய எம்பெருமான் மீது மேலும் தோத்திரங்கள் பல இயற்றி வாழ்வடையுமாறு அன்னவன் அருளை வேண்டுகின்றோம். இந்நூல் டி. சர்மா அவர்கள் பால்பெறற் பாலது.

நயினை நாகபூஷணம்பிகை கோயில் உரிமையரும் வித்வான்
தி. இராமச்சந்திரன் அவர்களின் மருகரும் வேளாண் குல திலகருமாகிய
திருவாளர்
சி. க. மணியம் அவர்களால்
வழங்கப்பட்ட
அறுசீர்க்கழி நெடிலாசிரிய விருத்தம்

விதியினை மதியால் வெல்லும் வென்றியை
[யுலகம் உய்யச்
சுவையினு மினிய சொல்லாற் சொல்லும்
[வித்தகமே! சுன்னை
அதிபனெம் குமார சாமி யண்ணலின்
[அறிவு பெற்றோன்
றதியினல் உதித்த சோதீ! சோபனம்
[வாழ்க மாதோ

—


# REVIEW.

TOWARDS TRANSCENDENCE.

**A BOOK ON YOGA**

**by an inmate of the**

SRI AUROBINDO ASHRAM.

PONDICHERRY.

**Publication duly Authorised by**

**SRI AUROBINDO**

(Publisher,)

RAMESHWAR & Co.,

CHANDERNAGORE.

"These are the experiences of a seeker from the contradictions of a limited human mind to the effulgence of the Higher Mind following a path of direct and original research."

One gets into the inner Practice & Psychology of Sri Aurobindo's Philosophy by even a cursery perusal showing how from the limitations of human life one can rise to the superiorty of true supermanhood.

Copies can be had at:—

Nandi Publishing House,

PONDICHERRY.

## மகாத்மா காந்தியின் நூல்கள்

—

சத்திய சோதனை அல்லது மகாத்மா காந்தியின் சுயசரிதம்:—உலகம் போற்றும் உத்தமராகிய மகாத்மா காந்தி தமது சுய சரிதத்தை "நவஜீவன்" பத்திரிகையில் எழுதி வந்தது யாவரும் அறிந்ததே. அச்சரிதத்தின் முதல் மூன்று பாகங்களை மகாத்மாவினல் செய்யப்பட்ட பல சீர்திருத்தங்களுடன் சத்தியாக்கிரக ஆசிரமத்தார் புத்தக வடிவில் வெளியிட்டிருக்கிறார்கள். அப்புத்தகத்தின் நேரிய மொழிபெயர்ப்பு இத்தமிழ் நூலாகும். இப்புத்தகம் அடிகளின் அநுமதியின் பேரில், மூலத்தின் கருத்துக்கிசைய நல்ல தமிழ் நடையில் மொழிபெயர்க்கப்பட்டு அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| 1-வது பாகம் | ரூ. | 2–8–0. |
| 2 ,, ,, | ரூ. | 2–8–0. |

—

மகாத்மாகாந்தி:—பிரான்ஸின்பேராசியரும் மகாபண்டிதரும் பரம ஞானியும் நோபல் வெகுமதி பெற்றவருமான ரோமேன் ரோலண்டு எழுதியது. அவர் பிறந்தது முதல் ஆறு வருஷம் தண்டனை யடைந்தது வரை உள்ள ஒவ்வோர் அம்சமும் இந்நூலில் அழகாகக் காணப்படும். ஐரோப்பிய பேராசியரால் எழுதப்பட்ட இப்புத்தகத்தை அனைவரும் வாங்கிப் படிக்கவேண்டும் "காந்தியே! அவதார புருஷரே! இவ்வுலகை நீர்தான் காப்பாற்றவேண்டும்." என்று மகாத்மாவை ரோமேன்ரோலண்டுவாயார வாழ்த்தி மனமாரத் துதித்து மிக்க பயபக்தி விசுவாசத்துடன் தக்க ஆராய்ச்சியின் மேல் எழுதி யிருக்கிறார்.

விலை அணு 12.

கிடைக்குமிடம்

நந்தி வெளியீட்டு மன்றம்

புதுவை.



**Bureau de la Direction :**

RUE D'AMBALATADOUAYER MADAM No. 4.

Sandhanam Printing Works, Pondicherry.

காரியாலயம்:—

அம்பலத்தாடு ஐயர் மடத்து வீதி நெ. 4

Le Gérant R.Nagarattinam.